# தமிழ்நாடு தொழில் வெடிமருந்து நிறுவனம்

(ஒரு தமிழ்நாடு அரசு நிறுவனம்)

## 40ஆம் ஆண்டறிக்கை 2022 - 2023

### இயக்குநரவை

**திருமதி. பூஜா குல்கர்ணி**, இ.ஆ.ப.,
*அரசு சிறப்பு செயலர் / தொழில்துறை.*
*தலைவி மற்றும் நிர்வாக இயக்குநர்*

**திரு. சி. ஆர். பாலாஜி,**
*அரசு கூடுதல் செயலர், நிதித்துறை*

பேராசிரியர் **பரத் பி.தர்,**
ஆலோசகர்,
உயர் கல்விமுறை, ஆராய்ச்சி பயிற்சி
மற்றும் தொடர் மேலாண்மை,
புதுதில்லி

டாக்டர் **கோ. நடராஜன்,**
*பட்டய கணக்காளர்*

### தணிக்கையர்

**S. உதயகுமார் & அசோசியேட்ஸ்**
*பட்டய கணக்காளர்கள்,* வேலூர்–7

### வங்கியர்

**இந்தியன் ஓவர்சீஸ் வங்கி**
**வேலூர் & சென்னை**

ஸ்டேட் பேங்க் ஆப் இந்தியா,
வேலூர் & சென்னை.

**பதிவு அலுவலகம் :**

**ஆவின் இல்லம், 3வது தளம்,**
**3A, பசும்பொன் முத்துராமலிங்கனார் தெரு,**
**நந்தனம், சென்னை - 600 035**
போன் : 044-28412003 / 2005

**ஆலை :**

வண்டரன்தாங்கல் கிராமம், டெல் அஞ்சல்,
காட்பாடி தாலுக்கா,
வேலூர் – 632 059, தமிழ்நாடு, இந்தியா.
போன் : 0416-2296661/2

## பங்குதாரர்களுக்கான கூட்ட அறிவிப்பு

*தமிழ்நாடு தொழில் வெடிமருந்து நிறுவனத்தின் 40ஆம் ஆண்டு பொதுக்கூட்டம் வருகின்ற செப்டம்பர் மாதம், 29 ஆம் தேதி 2023, வெள்ளிக்கிழமை அன்று காலை 11.00 மணிக்கு ஒளிக்கூட்டம் / மற்றும் ஒலி ஒளி காட்சி மூலமாக பின்வரும் அலுவல்கள் மேற்கொள்ளப்படும். இந்தக் கூட்டம், எழிலகம், 4 வது மாடி, சேப்பாக்கம், சென்னை - 600005 ல் இருந்து கீழ்காணும் பரிவர்த்தனைகள் மேற்கொள்ளப்பட்டது என கருதப்படும்.*

**சாதாரண அலுவல்கள் :**

1. *2023 ஆம் ஆண்டு மார்ச் 31ம் நாளைய இருப்பு நிலைக் குறிப்பு மற்றும் அந்நாளோடு முடிவடையும் ஓராண்டிற்கான இலாப நட்டக் கணக்கு, அதன் இயக்குநர் அறிக்கை மற்றும் தணிக்கையர் அறிக்கையை பெறல், விவாதித்தல் மற்றும் ஏற்றல்.*

**சிறுப்பு அலுவல்கள் :**

2. *பின்வரும் தீர்மானத்தை, மாற்றி அமைத்தோ அல்லது மாற்றாமலோ, சாதாரண தீர்மானமாக நிறைவேற்றுவதற்கு பொருத்தமாக இருந்தால் பரிசீலிக்கவும்.*

   *பிரிவு 149, 152 மற்றும் நிறுவனங்கள் சட்டம் 2013ல் பொருத்தக்கூடிய பிறவிதிகளின்படி, மற்றும் சட்டத்தின் அட்டவனை viன் படி இணைத்து, நிறுவனங்கள் (இயக்குநர்களின் நியமனம் மற்றும் இயக்குநர்களின் தகுதிகள்) விதி 2014 மற்றும் அதன் கீழ் உள்ள பிற உட்பிரிவு விதிகளின்படி டாக்டர் மாரிமுத்து கார்த்திகேயன் (DIN 10085422) நிறுவனத்தின் சுயேச்சை மற்றும் நிர்வாகமற்ற இயக்குநராக நியமிக்கப்படுவதற்கு, இயக்குநர் குழுவில் அங்கீகரிக்கப்பட்டவரை, ஒரு பங்குதாரர், நிறுவனச் சட்டத்தின் 160வது பிரிவின் கீழ், எழுத்து பூர்வமாக முன்மொழிந்த அறிவிப்பை நிறுவனம் பெற்றுள்ளது. அவரும் சட்டத்தின் 149(6) பிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ள சார்பற்ற அளவுகோல்கள் பூர்த்தி செய்துள்ளதாக அறிக்கை சமர்ப்பித்துள்ளதால், அவரை 29.09.2023 முதல் மூன்று வருடத்திற்கு சுயேச்சை மற்றும் நிர்வாகமற்ற இயக்குநராக நியமிக்கப்பட வேண்டும். அவரது பதிவு காலத்தில், சுழற்சி முறையில் ஓய்வு பெற முடியாது. மேலும், மேற்கூறிய தீர்மானத்தை நடைமுறை படுத்துவதற்கான அனைத்து செயல்கள் செய்வதற்கும் மற்றும் முறையான அனைத்து நடவடிக்கைகள் எடுப்பதற்கும் இதன் மூலம் இயக்குநர்கள் குழுவிற்கு அதிகாரம் உள்ளது என்று தீர்மானிக்கப்பட்டுள்ளது.*

3. *பின்வரும் தீர்மானத்தை, மாற்றி அமைத்தோ அல்லது மாற்றாமலோ, சாதாரண தீர்மானமாக நிறைவேற்றுவதற்கு பொருத்தமாக இருந்தால் பரிசீலிக்கவும்.*

   *பிரிவு 149, 152 மற்றும் நிறுவனங்கள் சட்டம் 2013 ல் பொருந்தக்கூடிய பிறவிதிகளின்படி, மற்றும் சட்டத்தின் அட்டவனை viன் படியும் இணைத்து, நிறுவனங்கள் (இயக்குநர்களின் நியமனம் மற்றும் இயக்குநர்களின் தகுதிகள்) விதி 2014 மற்றும் அதன் கீழ் உள்ள பிற உட்பிரிவு விதிகளின்படி டாக்டர் கோபால் கிருஷ்ண ராஜு (DIN 00860886) நிறுவனத்தின் சுயேச்சை மற்றும் நிர்வாகமற்ற இயக்குநராக நியமிக்கப்படுவதற்கு, இயக்குநர் குழுவில் அங்கீகரிக்கப்பட்டவரை, ஒரு பங்குதாரர், நிறுவனச்சட்டத்தின் 160 வது பிரிவின் கீழ் எழுத்து பூர்வமாக முன்மொழிந்த அறிவிப்பை நிறுவனம் பெற்றுள்ளது. அவரும் சட்டத்தின் 149(6) பிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ள சார்பற்ற அளவுகோல்கள் பூர்த்தி செய்துள்ளதாக அறிக்கை சமர்ப்பித்துள்ளதால், அவரை 29.09.2023 முதல் மூன்று வருடத்திற்கு சுயேச்சை மற்றும் நிர்வாகமற்ற இயக்குநராக நியமிக்கப்படவேண்டும். அவரது பதவி காலத்தில், சுழற்சி முறையில் ஓய்வு பெற முடியாது. மேலும் மேற்கூறிய தீர்மானத்தை நடைமுறை படுத்துவதற்கான அனைத்து செயல்கள் செய்வதற்கும் மற்றும் முறையான அனைத்து நடவடிக்கைகள் எடுப்பதற்கும் இதன் மூலம் இயக்குநர்கள் குழுவிற்கு அதிகாரம் உள்ளது என்று தீர்மானிக்கப்பட்டுள்ளது.*

## நிறுவனங்கள் சட்டம் 2013 ன் பிரிவு- 102(1) ன் கீழ் விளக்க அறிக்கை

**பொருள் எண் 2:**

*டாக்டர் மாரிமுத்து கார்த்திகேயன் (DIN 10085422) சுயேச்சை மற்றும் நிர்வாகமற்ற இயக்குநராக நியமிக்க இயக்குநர் குழுவால் நியமிக்கப்பட்டார். மற்றும் டாக்டர் மாரிமுத்து கார்த்திகேயன் (DIN 10085422), தேவையான அறிவு, அனுபவம் மற்றும் தேவையான அளவுகோல்களின்படி, சட்டம் மற்றும் அதன் கீழ் உருவாக்கப்பட்ட விதிகள் ஒழுங்கு முறைகளின் கீழ் தன்னிச்சையான மற்றும் நிர்வாகமற்ற இயக்குநர் பதவிக்கு பொருத்தமானவர் டாக்டர் மாரிமுத்து கார்த்திகேயன் (DIN 10085422) சுழற்சி முறையில் ஓய்வு பெற முடியாது. மேலும் 29.09.2023 முதல் மூன்று ஆண்டுகள் தொடர்ந்து பதவியில் இருப்பார். டாக்டர் மாரிமுத்து கார்த்திகேயன்*

(DIN *10085422)* அவர்களை சுயேச்சை மற்றும் நிர்வாகமற்ற இயக்குநராக நியமிப்பதற்கான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள், உறுப்பினர்கள் பதிவு அலுவலத்தில், எந்த வேலை நாட்களிலும், வேலை நேரத்தில், ஆய்வுக்கு கிடைக்கும்.

டாக்டர் மாரிமுத்து கார்த்திகேயன் (DIN *10085422)* தவிர வேறு எந்த இயக்குநரோ, நிறுவனத்தின் முக்கிய நிர்வாக பணியாளர்கள் மற்றும் அவர்களது உறவினர்களுக்கோ, முன் மொழியப்பட்ட இந்த தீர்மானத்தின் ஆர்வமோ அல்லது அக்கறையோ இல்லை. இந்த அறிவிப்பின்படி பொருள் எண் 2 ல் குறிப்பிடப்பட்டுள்ள இந்த தீர்மானத்தை நிறைவேற்ற இயக்குநர்கள் குழு பரிந்துரைக்கிறது.

**பொருள் எண் 3**

டாக்டர் கோபால் கிருஷ்ண ராஜு (DIN *00860886)* சுயேச்சை மற்றும் நிர்வாகமற்ற இயக்குநராக நியமிக்க இயக்குநர் குழுவால் நியமிக்கப்பட்டார். மற்றும் டாக்டர் கோபால் கிருஷ்ண ராஜு (DIN *00860886)* தேவையான அறிவு, அனுபவம் மற்றும் தேவையான அளவுகோல்களின்படி, சட்டம் மற்றும் அதன் கீழ் உருவாக்கப்பட்ட விதிகள் மற்றும் ஒழுங்கு முறைகளின் கீழ் தன்னிச்சை மற்றும் நிர்வாகமற்ற இயக்குநர் பதவிக்கு பொருத்தமானவர். டாக்டர் கோபால் கிருஷ்ண ராஜு (DIN *00860886)* சுழற்சி முறையில் ஓய்வு பெற முடியாது. மேலும் *29.09.2023* முதல் மூன்று ஆண்டுகள் தொடர்ந்து பதவியில் இருப்பார். டாக்டர் கோபால் கிருஷ்ண ராஜு (DIN *00860886)* அவர்களை சுயேச்சை மற்றும் நிர்வாகமற்ற இயக்குநராக நியமிப்பதற்கான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள், உறுப்பினர்கள் பதிவு அலுவலகத்தில், எந்த வேலை நாட்களிலும், வேலை நேரத்தில், ஆய்வுக்கு கிடைக்கும்.

டாக்டர் கோபால் கிருஷ்ண ராஜு (DIN *00860886)* தவிர வேறு எந்த இயக்குநரோ நிறுவனத்தின் முக்கிய நிர்வாக பணியாளர்கள் மற்றும் அவர்களது உறவினர்களுக்கோ, முன் மொழியப்பட்ட இந்த தீர்மானத்தில் ஆர்வமோ அல்லது அக்கறையோ இல்லை. இந்த அறிவிப்பின்படி பொருள் எண் 3ல் குறிப்பிடப்பட்டுள்ள இந்த தீர்மானத்தை நிறைவேற்ற இயக்குநர்கள் குழு பரிந்துரைக்கிறது.

இடம் சென்னை
நாள் *01.09.2023*

இயக்குநரவையின் ஆணைப்படி
**பூஜா குல்கர்ணி,** இ.ஆ.ப.,
தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர்

**குறிப்பு :**

1. COVID-*19* தீவிர நோய்பரவல் காரணமாக மக்கள் இடம் பெயர்தலுக்கு ஏற்படுத்தப்பட்டிருக்கும் தொடர் கட்டுப்பாடுகள் மற்றும் மக்கள் ஓரிடத்தில் கூடுவதற்கு அனுமதிக்கப்பட்டிருக்கும் எண்ணிக்கையை கருத்தில் கொண்டு, கார்ப்பரேட் விவகாரங்கள் அமைச்சகம் (MCA) அதன் சுற்றறிக்கை எண் *39/2020* நாள் *31.12.2020* மூலம் நிறுவனங்கள் அதன் பங்குதாரார்களின் கூட்டத்தினை ஒளிகூட்டம்/மற்றும் ஒலிஒளிகாட்சி முலமாக மட்டுமே நடத்த அனுமதியளித்துள்ளது. எனவே கார்ப்பரேட் விவகாரங்கள் அமைச்சகம் (MCA) சுற்றறிக்கையின்படி *40*ஆம் ஆண்டுப் பொதுக்கூட்டம், ஒளிகூட்டம்/மற்றும் ஒலி ஒளிகாட்சி முலமாக நடத்தப்படும். தொலைதுார மின்னியல் வாக்கு அளிக்கவும், ஒளிகூட்டம் மற்றும் ஒலிஒளிகாட்சி முலமாக, ஆண்டு பொதுகூட்டத்தில் கலந்து கொள்வதற்கும், ஆண்டு பொது கூட்டத்தில் மின்னியல் வாக்கு அளிப்பதற்கும் தேவையான வசதிகளை Central Depository Services (India) Limited, செய்து தரும். ஒளி கூட்டம் மற்றும் ஒலிஒளி கூட்டத்தில் கலந்து கொள்வதற்கான வழிமுறைகள் இந்த அறிவிப்பில் விளக்கப்பட்டுள்ளன. மேலும் இந்த விவரங்கள் இந்நிறுவன வெப் சைட் www.teltn.com ல் உள்ளன.

2. இந்த ஆண்டுப் பொதுக்கூட்டம் ஒளிகூட்டம் மற்றும் ஒலிஒளி காட்சி முலமாக நடத்தப்படுவதால், இந்த பொதுக்கூட்டத்திற்கு பகராள் நியமன சீட்டு வசதி கிடைக்காது. எனவே பகராள் நியமன படிவம் மற்றும் வருகைப் பதிவேடு இந்த அறிவிப்புடன் இணைக்கப்படவில்லை.

3. உறுப்பினர் பதிவேடும், பங்கு மாற்றம் பதிவேடுகளும் *23.09.2023* முதல் *29.09.2023* வரை (இரு நாளும் உள்பட) முடப்பட்டு இருக்கும்.

4. நிறுவன சட்டம் *2013*, பகுதி *113*ன் படி நிறுவன பெருநிறுவன உறுப்பினர்கள் இப்பொதுக்கூட்டத்தில் கலந்து கொண்டு வாக்களிக்க நிர்வாக குழு கூட்டத்தில் அங்கீகரிக்கப்பட்ட உறுப்பினர், அங்கீகரிக்கப்பட்ட நகலினை ஸ்கேன் செய்து tnielmf@gmail.com என்ற மின்னஞ்சலுக்கு அனுப்பி வைக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**மின்னஞ்சல் மூலமாக ஆண்டறிக்கையை அனுப்புவது மற்றும் ஆண்டறிக்கையை பெறுவதற்காக இமெயில் ஐடி பதிவு செய்வதற்கான வழிமுறைகள்.**

5. *கார்ப்பரேட் விவகாரங்கள் அமைச்சகம் (MCA) பொதுச் சுற்றறிக்கை எண் 20/2020 நாள் 5 மே 2020 ன்படி, பங்குகள் வைத்திருக்கும் உறுப்பினர்களுக்கு தபால் மூலம் அனுப்ப ஏற்படும் சிரமத்தை கருத்தில் கொண்டு, நிதி அறிக்கைகள் (இயக்குனர் குழுவின் அறிக்கை மற்றும் தணிக்கையாளர்களின் அறிக்கை உள்பட) மற்றும் ஆண்டு கூட்ட அறிவிப்பு ஆகியனவைகளை, நிறுவனத்தில் அல்லது சேமிப்பகத்தில் இமெயில் முகவரியை பதிவு செய்துள்ள பங்குதாரர்களுக்கு மின்னனு அஞ்சல் மூலம் அனுப்பி வைக்கப்படும்.*

6. *பங்குகளை சான்றிதழ்களாக (Physical form) வைத்திருக்கும் உறுப்பினர்கள் தங்களின் முகவரியில் மாற்றம் ஏதும் இருந்தால் அதனை நிறுவனத்திலோ அல்லது பங்கு பதிவாளர், சென்னை முகவரிக்கு உடனே தெரிவிக்கும்படி வேண்டப்படுகிறார்கள். பங்குகளை எலக்ட்ரானிக் முறையில் வைத்திருப்பவர்கள் அவர்களுடைய டெப்பாசிடரி பார்டிசிபன்சிடம் தெரிவிக்கவும்.*

7. *ஆண்டு பொதுக்குழு கூட்ட அறிவிப்பு மற்றும் 2022-23 ஆம் நிதியாண்டிற்கான ஆண்டறிக்கை இந்நிறுவனத்தின் மின்னஞ்சல் www.teltn.com மற்றும் evotingindia/com ல் உள்ளது.*

**Central Depository Services (India) Limited-ன் அமைப்பு - ஆண்டு பொதுக்குழுக் கூட்டத்தில் கலந்து கொள்வது மற்றும் மின்னனு தொலைதூர வாக்கு செலுத்தல்.**

1. *தற்போது வைரஸ் தொற்றில் உலக அளவில் ஏற்பட்டிருக்கும் சூழ்நிலை அனைவரும் அறிந்ததே, எனவே, நிறுவனங்களின் பொதுக்கூட்டங்கள் பெருநிறுவன விவகாரங்கள் துறை அமைச்சகத்தின் (MCA) சுற்றறிக்கை எண் 14/2020 நாள் ஏப்ரல் 8, 2020, சுற்றறிக்கை எண் 17/2020 நாள் ஏப்ரல் 13, 2020 மற்றும் சுற்றறிக்கை எண் 20/2020 நாள் மே 5, 2020. சுற்றறிக்கை எண் 57/2021 நாள் 14, டிசம்பர், 2021, ஆகியவற்றின் வழிகாட்டுதல்படி நடைபெறப்போகும் ஆண்டுப் பொதுக்கூட்டம் நடத்தப்பட வேண்டும். எனவே பொதுக்கூட்டம் ஒளி காட்சி (VC) அல்லது பிற ஒலி ஒளி காட்சி மூலமாகவே (OAVM) நடத்தப்படும். எனவே உறுப்பினர்கள் ஒளி காட்சி (VC) அல்லது பிற ஒலி ஒளி காட்சி மூலமாகவே (OAVM) நடைபெறபோகின்ற ஆண்டு பொதுக்கூட்டத்தில் கலந்து கொண்டு பங்கேற்கவும்.*

2. *நிறுவனங்கள் சட்டம் 2013, பகுதி 108ன் ஏற்பாடுகளுக்கு இணங்க மேலும் நிறுவனங்கள் (மேலாண்மை மற்றும் நிர்வாகம்) சட்டம் 2014. ஆணை 20 (மாற்றப்பட்டபடி) மற்றும் பெருநிறுவன விவகாரங்கள் துறை அமைச்சகத்தின் (MCA) ஏப்ரல் 8. 2020. ஏப்ரல் 13, 2020 மற்றும் மே 5, 2020 ஆம் தேதியிட்ட சுற்றறிக்கையின்படி இந்நிறுவனம் நடைபெறப்போகும் ஆண்டுப் பொதுக்கூட்டத்தில் நடத்தப்பட வேண்டிய பரிவர்த்தனை மீது பங்குதாரர்கள் தொலைதூர வாக்களிக்க வசதி செய்துள்ளது. இதற்காக நிறுவனம் Central Depository Services (India) Limited உடன் மின்னனு வாக்கு செயல்பாட்டை நடைமுறைபடுத்த ஓர் ஒப்பந்தம் செய்துள்ளது. பங்குதாரர்கள் ஆண்டு பொது குழு கூட்டத்தின் சமயத்தில் மின்னனு ஓட்டு செலுத்தவும், தொலைதூர வாக்கினை செலுத்தவும் CDSL நிறுவனம் வசதிகளை செய்து தரும்.*

3. *உறுப்பினர்கள் நடைபெற்போகும் ஆண்டுப் பொதுக்கூட்டம் ஒளி காட்சி (VC) அல்லது பிற ஒலி ஒளி காட்சி தொடங்குவதற்கு வரையறுக்கப்பட்ட 15 நிமிடங்கள் முன்னதாகவோ அல்லது பிறகோ அறிக்கையில் கொடுக்கப்பட்டுள்ள வழிமுறைகளை பின்பற்றி கலந்து கொள்ளலாம். இந்த வசதி முதலில் கலந்து கொள்ளும் 1000 பேருக்கு "முதலில் வருவோருக்கு முன்னுரிமை" என்ற முறையில் அனுமதியளிக்கப்படும். இது அதிகப்படியான பங்குகள் வைத்திருப்போருக்கு (2 சதவிகிதமோ அல்லது அதற்கு மேல் பங்குகள் வைத்திருப்போர்) அபிவிருத்தியாளர்கள், நிறுவன முதலீட்டாளர்கள், இயக்குநர்கள், பிரதான நிர்வாக ஊழியர்கள், தணிக்கைக்குழுவின் தலைவர், நியமனம் மற்றும் ஊதிய குழு மற்றும் பங்குதாரர்கள் உறவுக் குழு தணிக்கையாளர்கள் போன்றோர் இதில் அடங்காது. அவர்கள் எவ்வித தடையுமின்றி "முதலில் வருவோருக்கு முன்னுரிமை" என்ற முறையில் அனுமதிக்கப்படுவார்கள்.*

4. *ஆண்டு பொதுக்கூட்டத்தில் ஒளி காட்சி (VC) அல்லது பிற ஒலி ஒளி காட்சி மூலம் கலந்துகொள்வோரின் (நிறுவன சட்டம் 2013, பகுதி 103ன் படி) வருகையை குறைவெண் வரம்பிற்குள் உள்ளதாக கணக்கிடப்படும்.*

5. *பெருநிறுவன விவகாரங்கள் துறை அமைச்சகத்தின் (MCA) சுற்றறிக்கை எண் 14/2020 நாள் ஏப்ரல் 8, 2020 ன் படி இந்த ஆண்டு பொதுகுழு கூட்டத்தில், கலந்து கொள்வதற்கும், வாக்களிப்பதற்கும் பகராளியை நியமிக்கும் வசதி இல்லை. ஆனால் நிறுவனங்கள் சட்டம், 2013, பகுதி 112 மற்றும் 113ன்படி இந்திய ஜனாதிபதி மற்றும் கவர்னர் அல்லது நிறுவனத்தின் பிரதிநிதியாளர்கள் ஒளி காட்சி (VC) அல்லது பிற ஒலி ஒளி காட்சி மூலமாகவோ (OAVM) நடைபெறப்போகின்ற ஆண்டு பொதுக்கூட்டத்தில் கலந்து கொண்டு தனது மின்னனு வாக்குகளை செலுத்தலாம்.*

6. பெருநிறுவன விவகாரங்கள் துறை அமைச்சகத்தின் ஏப்ரல் 13ம் தேதியிட்ட சுற்றறிக்கை எண் 17/2020 க்கு ஏற்ப, பொது குழு கூட்டத்திற்கான அழைப்பு அறிவிப்பு நிறுவனத்தின் வலைதளமான www.teltn.com ல் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது. இந்த ஆண்டு பொது குழு கூட்டத்தின் அறிவிப்பு (தொலைதூர மின்னியல் வாக்கு மற்றும் பொது குழு கூட்டம் நடக்கும் சமயத்தில் மின்னனு வாக்கு, வசதி செய்யும் முகவர்) வலைதளமான www.evoting.india.comல் பரப்பப்படும்.

7. நிறுவன சட்டம் 2013, ஆகியவற்றுடன் (MCA) சுற்றறிக்கை எண் 14/2020, 8 ஆம் தேதி ஏப்ரல் 2020 17/2020, தேதி ஏப்ரல் 13, 2020, மற்றும் 20/2020, தேதி மே 5, 2020 ஆகியவற்றுடன் இணைந்து அதற்கு இணங்க ஒளி/ஒலி ஒளி முலமாக பொது குழு கூட்டம் கூட்டப்படுகிறது.

8. இந்த அமைச்சின் பொதுச் சுற்றறிக்கை எண் 20/2020, 05 மே 2020 தேதியிட்டதன் தொடர்ச்சியாகவும், உரிய ஆய்வுக்குப் பிறகு, 28.12.2020 தேதியிட்ட MCA சுற்றறிக்கையின்படி, 05.05.2020 தேதியிட்ட பொது சுற்றறிக்கை எண் 20/2020 இன் 3 மற்றும் 4 பத்திகளில் வழங்கப்பட்ட தேவைகளுக்கு இணங்க 2023 ஆம் ஆண்டில் நடைபெறவிருக்கும் நிறுவனங்களின் AGM செப்டம்பர் 30 ஆம் தேதி அல்லது அதற்கு முன்பாக AGM களை நடத்த அனுமதிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

**மின்னியல் வழியாக வாக்களிக்கவும் மெய்நிகர் கூட்டத்தில் சேர்ந்து கொள்வதற்கும் பங்குதாரர்களுக்கான அறிவுறுத்தல்கள் பின்வருமாறு :**

(i) வாக்களிப்பு 26,09,2023 அன்று காலை 9.00 மணிக்கு தொடங்கி 28,09,2023 அன்று மாலை 5,00 மணிக்கு நிறைவு பெறும்.

(ii) 22.09.2023 அன்றைய நாளில் அவர்களது பங்குகளை தாள் வடிவத்தில் அல்லது டிஜிட்டல் வடிவத்தில் வைத்திருக்கும் நிறுவனத்தின் பங்குதாரர்கள் அவர்களது வாக்குகளை மின்னியல் வழியாக செலுத்தலாம். அதன்பிறகு மின்னியல் முறை வாக்களிப்பு CDSL ஆல் முடக்கப்படும்.

(iii) கூட்டம் நடைபெறுவதற்கு முன்பாக வாக்களித்த பங்குதாரர்கள் கூட்டம் நடக்கும் இடத்தில் வாக்களிக்க உரிமை இல்லை.

(iv) Securities Exchange Board of India ஒழுங்குமுறை 2015 (கடமைகள் மற்றும் வெளிப்படுத்துதல் தேவைகள் பட்டியலிடுதல்) கீழ் 09.12.2020 தேதியிட்ட SEBI/HO/CFD/CMD/CIR/P/2020/242 ன் சுற்றறிக்கையின்படி பட்டியலிடப்பட்ட அனைத்து நிறுவனங்களும் எல்லா பங்குதாரர்களின் தீர்மானங்கள் மீதும் மின் வாக்கு அளிக்கும் வசதியை வழங்க வேண்டும். ஆனால், நிறுவன பங்குதாரர்கள் / சில்லறை பங்குதாரர்களின், மின் வாக்களிப்பில் பங்கேற்பு, மிகவும் குறைவாகவே உள்ளது என கவனிக்கப்பட வேண்டியது ஆகும்.

தற்போது இந்தியாவில் பட்டியிலிடப்பட்ட நிறுவனங்களுக்கு மின் வாக்களிக்கும் வசதியை, பல மின் வாக்களிப்பு சேவை வழங்காளர்கள் (ESPS) உள்ளனர், இதனால் பல்வேறு EPS ல் பதிவு செய்தல் மற்றும் பங்குதாரர்கள் பல பயனர் ஐடி மற்றும் கடவுச் சொற்களை பராமரிப்பது அவசியம்.

வாக்களிக்கும் செயல்முறைகளின் செயல்திறனை அதிகரிப்பதற்காக, பொது ஆலோசனையின்படி அனைத்து டிமேட் கணக்கு வைத்திருப்பவர்களுக்கும், அவர்களின் டிமேட் கணக்குகள் / டெப்பாசிட்டுகள் / டெப்பாசிட்டரி பங்கேற்பாளர்களின் இணையதளம் முலம் ஒற்றை உள்நுழைவு சான்றுகள் முலம் மின்னனு வாக்களிப்பை செயல்படுத்த முடிவு செய்யப்பட்டுள்ளது. Demat கணக்கு வைத்திருப்பவர்கள் மீண்டும் ESPSல் பதிவு செய்யாமல் வாக்களிக்க முடியும். இதன்முலம் முறையற்ற அங்கீகாரத்தை எளிதாக்குவது மட்டுமல்லாமல் வாக்களிக்கும் செயல்பாட்டில், எளிமை மற்றும் வசதியை அதிகரிக்கும்.

**வழிமுறை 1**

டிமேட் முறையில் பங்குகள் வைத்திருக்கும், தனிப்பட்ட பங்குதாரர்கள், CDSL/NDSL டெப்பாசிட்டரிகள் முலம், மின் வாக்கு அளிப்பதற்கான வழிமுறை.

(v) பட்டியலிடப்பட்ட நிறுவனங்களால் வழங்கப்படும் வாக்குப்பதிவு வசதி குறித்து செபி சுற்றறிக்கை எண் SEBI/HO/CFD/CMD/CIR/P/2020/242 dated 9th December 2020 ன்படி, டிமேட் முறையில் பத்திரங்கள் வைத்திருக்கும் தனிப்பட்ட பங்குதாரர்கள். டெப்பாசிட்டரிகள் மற்றும் டெப்பாசிட்டரி பங்கேற்பாளர்களுடன் பராமரிக்கப்படும் டிமேட் கணக்குகள் முலம் வாக்களிக்க அனுமதிக்கப்படுகிறார்கள். பங்குதாரர்கள் தங்கள் மொபைல் மற்றும் மின்னஞ்சல் ஐடியை தங்கள் டிமேட் கணக்குகளில் புதுப்பித்து மின்வாக்களிக்கும் வசதியை அணுக அறிவுறுத்தப்படுகிறார்கள்.

மேற்கூறிய செபி சுற்றறிக்கையின்படி, டிமேட் முறையில் CDSL/NSDL இல் பத்திரங்களை வைத்திருக்கும், தனிப்பட்ட பங்குதாரர்களுக்கான மின் வாக்களிப்பு மற்றும் மெய்நிகர் சந்திப்புகளில் சேருவதற்கான பதிவு முறை கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

| பங்குதாரர்கள் வகை | உள் நுழைவு முறை |
|---|---|
| CDSL டெப்பாசிட்டரியுடன் டிமேட் முறையில் பத்திரங்களை வைத்திருக்கும் தனிப்பட்ட பங்குதாரர் | 1) CDSL ன் எளிதான / எளிமையான வசதியை தேர்ந்தெடுத்த பயனாளர்கள் தங்களின் தற்போதய பயணர் ஐடி மற்றும் கடவு சொல் மூலம் உள்ளே நுழையலாம். அவர்கள் எந்த வித கூடுதல் அங்கீகாரம் இல்லாமல் மின் வாக்களிப்பு பக்கத்தை அடையலாம். எளிதாக / எளிமையான பயணாளர்கள், உள் நுழைவதற்கு CDSL இணைய தளமான www.cdslindia.com ஐ பார்வையிட்டு, உள்நுழைவு ஐகான் மற்றும் new system myeasi tab கிளிக் செய்யவும்.<br><br>2) வெற்றிகரமாக உள்ளே நுழைந்த பிறகு, எளிதாக / எளிமையான பயணாளர்கள், நிறுவனங்கள் வழங்கிய தகவலின்படி, தற்போது மின் வாக்களிப்பு நடந்து கொண்டு இருக்கும், தகுதியுள்ள வாக்கு அளிக்கக்கூடிய நிறுவனங்கள் பற்றிய தகவல் அறிய இயலும். வாக்களிக்கும் விருப்பத்தை கிளிக் செய்வதின் முலம். தொலைதுார மின்வாக்களிப்பு காலத்தில், வாக்களிப்பதற்காக அல்லது மெய்நிகர் சந்திப்பில் சேர்வதற்காகவும், சந்திப்பின் போது வாக்களிப்பதற்காகவும், மின் வாக்களிப்பு சேவை வழங்குநரின் மின் வாக்களிப்பு பக்கத்தை பயனர் பார்க்க இயலும். கூடுதலாக அனைத்து இ வோட்டிங் சேவை வழங்குநர்கள் அமைப்பை அணுகுவதற்கான இணைப்புகளும் வழங்கப்பட்டுள்ளன, இதனால் பயனர் நேரடியாக மின் வாக்களிப்பு தேவை வழங்குநர்களின் வலைத்தளத்தை பார்வையிடமுடியும்.<br><br>3) பயணாளர் எளிதாக / எளிமையான என்பதில் பதிவு செய்யாமல் இருந்தால். அதனை பதிவு செய்யும் வசதி உள்ளது. அதற்கு cdslindia.com ல் நுழைந்து, பதிவு செய்யும் விருப்பத்திற்காக new system myeasi என்ற tab ஐ க்ளிக் செய்யவும்.<br><br>4) மாற்றாக, www.cdslindia.com முகப்பு பக்கத்தில் உள்ள மின் வாக்களிக்கும் இணைப்பிலிருந்து டிமேட் கணக்கு எண் மற்றும் பான் எண்ணை வழங்குவதன் மூலம் பயனர் நேரடியாக மின் வாக்களிப்பு பக்கத்தை அணுகலாம். டிமேட் கணக்கில் பதிவு செய்யப்பட்டுள்ள மொபைல் மற்றும் மின்னஞ்சலில் OTP அனுப்புவதன் முலம் கணிணி பயனரை அங்கீகரிக்கும். வெற்றிகரமான அங்கீகாரத்திற்கு பதிவிட்ட பிறகு வாக்களிப்பு நடந்து கொண்டிருக்கும் மின் வாக்களிப்பு விருப்பத்தை பயணர் பார்க்க முடியும், மற்றும் அனைத்து மின் வாக்களிப்பு சேவை வழங்குநர்களை நேரடியாக அணுக முடியும். |
| NSDL டெப்பாசிட்டரியுடன் டிமேட் முறையில் பத்திரங்கள் வைத்திருக்கும் தனிப்பட்ட பங்குதாரர்கள் | 1) ஏற்கனவே NSDL IDeAS வசதியில் பதிவு செய்திருந்தால், தயவு செய்து NSDLன் இ சேவைகள் இணைய தளத்தை பார்வையிடவும். தனிப்பட்ட கணிணி அல்லது மொபைலில் பின்வரும் URL ஐ தட்டச்சு செய்து இணைய உலாவியை திறக்கவும் https://eservices.nsdl.com.<br><br>இ சேவைகளின் இ முகப்பக்கம் தொடக்கப்பட்டதும் Ideas பிரிவின் கீழ், உள்நுழைவு என்ற பகுதியில் உள்ள Beneficial owner என்ற ஐகானை க்ளிக் செய்யவும். ஒரு புதிய திரை திறக்கும். உங்கள் பயணர் ஐடி மற்றும் கடவு சொல்லை உள்ளிட வேண்டும். வெற்றிகரமான அங்கீகரத்திற்கு பிறகு நீங்கள் evoting சேவைகளைப் பார்க்க முடியும். இ வோட்டிங் சேவையின் கீழ் evoting |

| | |
|---|---|
| | செய்வதற்கான அணுகலை க்ளிக் செய்யவும். பிறகு நீங்கள் பக்கத்தை பார்க்க இயலும். கம்பெனி பெயர் அல்லது இ வாக்களிப்பு சேவை வழங்குநரின் பெயரை க்ளிக் செய்யவும். தொலைதூர மின் வாக்களிப்பு காலத்தில் உங்கள் வாக்கைப் பதிவு செய்வதற்காக அல்லது மெய்நிகர் மீட்டிங்கில் சேர்வதற்காகவும், சந்திப்பின் போது வாக்களிக்கவும், நீங்கள் மின் வாக்களிப்பு சேவை வழங்குநரின் இணைய தளத்திற்கு திருப்பி விடப்படுவீர்கள்.<br>2) பயணர் Ideas e சேவையில் பதிவு செய்யாவிடில், https://eservices.nsdl.com என்ற வலைதளத்தில் பதிவு செய்ய இயலும். “Ideas portal ஆன்லைனில் பதிவு செய்க” என்பதை தேர்ந்தெடுக்கவும் அல்லது https://eservices.nsdl.com/secure web/ideasdirectreg.jsp என்பதை க்ளிக் செய்க.<br>3) NSDL ன் இ வாக்களிக்கும் இணைய தளத்தை பார்வையிடவும், தனிப்பட்ட கணிணி அல்லது மொபைலில், பின்வரும் URL:https://www.evoting.nsdl.com என்று தட்டச்சு செய்து. இணைய உலாவியை திறக்கவும். மின் வாக்களிப்பு முறையில் முகப்பு பக்கம் தொடங்கப்பட்டதும், பங்குதாரார் / உறுப்பினர் பிரிவில் இருக்கும், உள்நுழைவு ஐகானை க்ளிக் செய்யவும். ஒரு புதிய திரை திறக்கும். உங்கள் பயணர் ஐடி (அதாவது NSDL உடன் வைத்திருக்கும் 16 இலக்க டிமேட் கணக்கு எண், கடவு சொல் / OTP மற்றும் திரையில் காட்டப்பட்டுள்ள, சரி பார்ப்பு குறியீட்டை உள்ளிட வேண்டும். வெற்றிகரமான அங்கீகாரத்திற்கு பிறகு நீங்கள் NSDL டெப்பாசிட்டரி தளத்திற்கு அனுப்பப்படுவீர்கள். அதில் நீங்கள் மின் வாக்களிப்பு பக்கத்தை பார்க்கலாம். கம்பெனி பெயர் அல்லது வாக்களிப்பு சேவை வழங்குநரின் பெயரை க்ளிக் செய்யவும். தொலைதூர மின் வாக்களிப்பு காலத்தில் உங்கள் வாக்கை பதிவு செய்வதற்காக அல்லது மெய்நிகர் மீட்டிங்கில் சேர்வதற்காக, சந்திப்பின் போது வாக்களிக்கவும், நீங்கள் மின் வாக்கு சேவை வழங்குநரின் இணைய தளத்திற்கு திருப்பி விடப்படுவீர்கள். |
| தனிப்பட்ட பங்குதாரர்கள் (டிமேட் முறையில் பத்திரங்களை வைத்திருத்தால்), தங்கள் டெப்பாசிட்டரி பங்கேற்பாளர்கள் முலம் உள்நுழையவும். | இ வாக்களிக்கும் வசதிக்காக, NSDL / CDSL இல் பதிவு செய்யப்பட்ட உங்கள் டெப்பாசிட்டரி பங்கேற்பாளர் முலமாகவும் உங்கள் டிமேட் கணக்கின் நுழைவுச் சான்றுகளை பயன்படுத்தி உள் நுழையவும். வெற்றிகரமாக உள்நுழைந்த பிறகு, நீங்கள் evoting விருப்பத்தை பார்க்க முடியும். நீங்கள் இ வாக்களிப்பு விருப்பத்தை க்ளிக் செய்தவுடன், வெற்றிகரமான அங்கீகாரத்திற்கு பிறகு நீங்கள் NSDL / CDSL டெப்பாசிட்டரி தளத்திற்கு அனுப்பப்படுவீர்கள். அதில் நீங்கள் NSDL / evoting அம்சத்தை காணலாம். கம்பெனியின் பெயர் அல்லது இவாக்களிப்பு சேவை வழங்குபவரின் பெயரை க்ளிக் செய்யவும். தொலைதூர மின் வாக்களிப்பு காலத்தில் உங்கள் வாக்கை பதிவு செய்வதற்காக அல்லது மெய்நிகர் மீட்டிங்கில் சேர்வதற்காக, சந்திப்பின்போது வாக்களிக்கவும். நீங்கள் மின் வாக்கு சேவை வழங்குநரின் இணைய தளத்திற்கு திருப்பி விடப்படுவீர்கள். |

**முக்கிய குறிப்பு :** பயணர் ஐடி / கடவு சொல்லை திரும்ப பெற முடியாதவர்கள், மேலே குறிப்பிட்டுள்ள இணைய தளத்திலிருக்கும் “பயணர் ஐடி / கடவு சொல்லை மறந்து விட்டேன்” என்கிற விருப்பத்தை தேர்வு செய்து பயன்படுத்துமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள்.

**டிமேட் முறையில் பத்திரங்கள் / டெப்பாசிட்டரி முலம் (அதாவது CDSL & NSDL) உள் நுழைவது தொடர்பான தொழில் நுட்ப சிக்கலுக்கான தனிப்பட்ட பங்குதாரர்கள் உதவி மையம் பற்றிய விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.**

| உள் நுழை வகை | உதவி மைய விவரங்கள் |
|---|---|
| CDSL உடன் டிமேட் முறையில் பத்திரங்களை வைத்திருக்கும் தனிப்பட்ட பங்குதாரர்கள் | உள் நுழைவதில் ஏதேனும் தொழில் நுட்ப சிக்கலை எதிர் கொள்ளும் உறுப்பினர்கள், helpdesk.evoting@cdslindia.com என்ற முகவரிக்கு கோரிக்கை அனுப்புவதன்முலம் CDSL உதவி மையத்தை தொடர்பு கொள்ளலாம். அல்லது கட்டணமில்லா எண் என்ற எண்ணை 1800 2255 33 தொடர்பு கொள்ளலாம். |
| NDSL உடன் டிமேட் முறையில் பத்திரங்களை வைத்திருக்கும் தனிப்பட்ட பங்குதாரர்கள் | உள் நுழைவதில் ஏதேனும் தொழில் நுட்ப சிக்கலை எதிர் கொள்ளும் உறுப்பினர்கள், evoting@nsdl.co.in என்ற முகவரிக்கு கோரிக்கை அனுப்புவதன் முலம் NDSL உதவி மையத்தை தொடர்பு கொள்ளலாம், அல்லது கட்டணமில்லா எண் 1800 1020 990 மற்றும் 1800 22 44 30 என்ற எண்ணை தொடர்பு கொள்ளலாம். |

**வழிமுறை 2**

தாள் வடிவில் பங்குகள் வைத்திருக்கும் பங்குதாரர்கள் மற்றும் டிமேட் முறையில் பங்கு வைத்திருக்கும் தனி நபர் அல்லாதவர்கள் CDSL முலம் மின் வாக்கு அளிப்பதற்கான வழிமுறைகள்.

(vi) டிமேட் வடிவத்தில் பங்குகளை வைத்திருக்காத தனி நபர் தவிர மற்ற பங்குதாரர்கள் மற்றும் பங்குதாரர்களுக்கான, மின் வாக்களிப்பு மற்றும் மெய்நிகர் சந்திப்புகளில் சேர்வதற்கான உள் நுழைவு முறை.

1. பங்குதாரர்களின் மின்னியல் வாக்களிப்பு வலைதளமான www.evotingindia.com ல் புகுபதிகை செய்ய வேண்டும்.

2. பங்குதாரர்கள் என்பதில் சொடுக்குங்கள்.

3. இப்போது பயணர் ஐடியை உள்ளிடுங்கள்.

   அ) CDSL பயணாளரின் 16 இலக்க ஐடி

   ஆ) NDSL ID யின் 8 எழுத்தினை தொடர்ந்து வாடிக்கையாளரின் 8 இலக்க ஐடி.

   இ) பங்குகளைத் தாள் வடித்தில் வைத்திருக்கும் உறுப்பினர்கள், நிறுவனத்தில் பதிவு செய்திருக்கும் இணைப்புத்தக எண்ணை (போலியோ நம்பர்) உள்ளிட வேண்டும்.

4. உருவ சரிபார்ப்பை உள்ளிடுங்கள் மற்றும் புகுபதிகையை சொடுக்குங்கள்.

5. பங்குகளை டிமேட் வடிவத்தில் நீங்கள் வைத்திருந்து www.evotingindia.com இல் புகுபதிகை செய்திருந்தால் மற்றும் இதற்கு முன்பு ஏதாவது வாக்களிக்கும் நிறுவனத்தில் வாக்கு செலுத்தியிருந்தால், அப்போது உங்களது தற்போதைய கடவுச்சொல்லைப் பயன்படுத்த வேண்டும்.

6. நீங்கள் முதல் முறை பயனாளராக இருந்தால் பின்வரும் நிலைகளை பின்பற்றுங்கள்.

| | பங்குகளை டிமேட் கணக்கில் பங்குகள் வைத்திருப்பவர்கள் தவிர தாள் வடிவத்தில் வைத்திருக்கும் உறுப்பினர்கள் |
|---|---|
| பான்<br>PAN | வருமான வரித்துறையால் வழங்கப்பட்ட 10 இலக்கங்கள் கொண்ட வரிவடிவ PAN எண் ஐ உள்ளிடுங்கள் (டிமேட் பங்குதாரர்கள் மற்றும் தாள் பங்குதாரர்கள் இருவருக்கும் பொருந்தும்). நிறுவனம் அல்லது டெப்பாசிட்டரி பங்கேற்பாளர்கள் தங்கள் PAN எண்ணை புதுப்பிக்காத பங்குதாரர்கள். நிறுவனம் / RTA அனுப்பிய வரிசை எண்ணைப் பயன்படுத்துமாறு கேட்டுக் கொள்ளப் படுகிறார்கள் அல்லது நிறுவனம் / RTA வை அனுகவும். |
| ஈவு தொகை செலுத்தக்கூடிய வங்கியின் விவரம் அல்லது பிறந்த தேதி | DMAT கணக்கில் அல்லது நிறுவனத்தின் பதிவு செய்துள்ள பிறந்த தேதி (dd/mm/yyyy format) அல்லது ஈவு தொகை செலுத்தக்கூடிய வங்கியின் விவரங்கள் உள்ளிட்டு, உள் நுழையவும். மேற்கூறிய தகவல்கள் சேமிப்பகத்திலோ அல்லது நிறுவனத்திலோ பதிவு செய்யப்படாமல் இருந்தால் பங்குதாரர்கள் ID / போலியோ நெம்பரை ஈவுத்தொகை செலுத்தக்கூடிய வங்கியின் விவரம் என்ற பகுதியில் குறிப்பிடவும். |

(vii) இந்த விவரங்களை முறையாக உள்ளிட்ட பிறகு சமர்ப்பி என்ற உரையாடல் பெட்டியில் சொடுக்குங்கள்.

(viii) தாள் வடிவத்தில் பங்குகளை வைத்திருக்கும் உறுப்பினர்கள் நேரடியாக நிறுவனத்தை தேர்ந்தெடுக்கும் திரைக்கு செல்வார்கள். இருப்பினும், டிமேட் பங்குகளை வைத்திருக்கும் உறுப்பினர்கள், இப்போது "கடவுச் சொல் உருவாக்கு" என்ற விவரப்பட்டியலை அடைவார்கள். அதிலுள்ள புதிய கடவுச்சொல் புலத்தில் அவர்களது புகுபதிகை கடவுச்சொல்லை கட்டாயமாக உள்ளிட வேண்டும். தவிர, வேறு இதர நிறுவனங்களில் வாக்களிக்கும் உரிமையுள்ள டிமேட் பங்குதார்கள் அந்த நிறுவனங்கள் CDSL இயங்கு தளத்தின் முலமாக மின்னியல் வாக்களிப்பை தேர்ந்தெடுக்கும் பட்சத்தில் அவற்றில் தீர்மானங்கள் நிறைவேற்றப்படும் போது இந்தக் கடவுச்சொல்லையே வாக்களிக்க பயன்படுத்த வேண்டும் என்பதையும் கவனத்தில் கொள்ளுங்கள். உங்கள் கடவுச் சொல்லை இரகசியமாக வைத்திருக்க வேண்டும் என்றும் கடுமையான பரிந்துரைக்கப்படுகிறது.

(ix) தாள் வடித்தில் பங்குகளை வைத்திருக்கும் உறுப்பினர்கள், இந்த அறிக்கையில் கண்டுள்ள தீர்மானங்களின் மீது வாக்களிக்க மட்டும் இந்த விவரங்களைப் பயன்படுத்திக் கொள்ளலாம்.

(x) நீங்கள் வாக்களிக்க தேர்ந்தெடுக்கும் சம்பந்தப்பட்ட நிறுவனத்தின் பெயர், பெயருக்கான EVSN இல் சொடுக்குங்கள்.

(xi) வாக்களிக்கும் பக்கத்தில் "தீர்மானத்தின் விவரம்" என்பதைக் காண்பீர்கள். அதன்மீதே வாக்களிக்கும் விருப்பத் தேர்வுகளாக ஆம் இல்லை என்பதும் காணப்படும். விருப்பத்திற்கேற்ப ஆம் அல்லது இல்லை என்ற ஒன்றைத் தேர்ந்தெடுங்கள். ஆம் என்ற விருப்பத்தேர்வு நீங்கள் இந்தத் தீர்மானத்தை ஏற்றுக் கொள்கிறீர்கள் என்றும் மற்றும் இல்லை என்ற விருப்பத் தேர்வு இந்த தீர்மானத்தை ஏற்றுக் கொள்ளவில்லை என்றும் பொருள்படும்.

(xii) தீர்மானத்தின் முழு விவரங்களையும் தெரிந்து கொள்ள நீங்கள் விரும்பினால் தீர்மானங்களின் கோப்பு இணைப்பின்மீது சொடுக்குங்கள்.

(xiii) நீங்கள் வாக்களிக்க விரும்பும் தீர்மானத்தை தேர்ந்தெடுத்தபிறகு சமர்ப்பி என்பதன் மீது சொடுக்குங்கள். அதை உறுதி செய்யும் உரையாடல் பெட்டி ஒன்று காட்சிப்படுத்தப்படும். நீங்கள் உங்கள் வாக்கை உறுதி செய்ய விரும்பினால் OK என்பதின் மீது கொடுக்குங்கள். அப்படி இல்லையென்றால் ரத்து செய் என்பதை சொடுக்குங்கள். அதன்பிறகு உங்கள் வாக்கை மாற்றிக் கொள்ளுங்கள்.

(xiv) தீர்மானத்தின்மீது உங்கள் வாக்கை "உறுதி" செய்துவிட்டால் அதன்பிறகு அதை மாற்றியமைக்க நீங்கள் அனுமதிக்கப்பட மாட்டீர்கள்.

(xv) வாக்களிக்கும் பக்கத்தில் உள்ள "அச்சு" செய்ய இங்கு சொடுக்கவும் என்ற விருப்பத் தேர்வில் சொடுக்குவதன் முலம் உங்கள் வாக்குகளின் அச்சுப் பிரதியை நீங்கள் எடுத்துக் கொள்ளலாம்.

(xvi) டிமேட் கணக்கை வைத்திருக்கும் ஒருவர் மாற்றப்பட்ட கடவுச் சொல்லை மறந்திருந்தால் அப்போது பயணர் மற்றும் உருவ சரிபார்ப்பு குறியீட்டை உள்ளிடுங்கள் மற்றும் கடவுச் சொல் மறந்து விட்டது என்பதில் சொடுக்கி அமைப்பின் துாண்டுதல்களுக்கு உட்பட்டு விவரங்களை உள்ளிடுங்கள்.

(xvii) BR / POA ஐ பதிவேற்றுவதற்கான விருப்ப ஏற்பாடு உள்ளது. BR / POA பதிவேற்றம் செய்யப்பட்டிருந்தால், அது சரிபார்ப்பதற்கு ஆய்வு செய்பவருக்கு கிடைக்கும்.

(xviii) தனி நபர் பங்குதாரல்லாதவர்கள் மற்றும் பொறுப்பாளர்களுக்கான குறிப்பு :

- தனிநபர் பங்குதாரரல்லாதவர்கள் (உம் தனிநபரல்லாதவர்கள், எச்ஹயுஎப், என் ஆர் ஐ போன்றவர்கள்) மற்றும் பொறுப்பாளர்கள் www.evotingindia.com என்ற வலைத்தளத்தில் புகுபதிகை செய்து கொண்டு அவர்களை பெருநிறுவனங்களாக பதிவு செய்து கொள்ள வேண்டும்.
- நிறுவனத்தின் முத்திரை மற்றும் கையொப்பத்துடன் கூடிய ஸ்கேன் செய்யப்பட்ட பதிவுப் படிவம் ஒன்றின் நகல் helpdesk.evoting@cdslindia.com என்ற முகவரிக்கு மின்னஞ்சல் செய்யப்பட வேண்டும்.
- புகுபதிகை விவரங்களை பெற்ற பிறகு, அட்மின் புகுபதிகை மற்றும் கடவுச்சொல்லை பயன்படுத்தி ஒரு இணக்கமான பயனர் ஒருவர் உருவாக்கப்பட வேண்டும். அந்த இனக்கமான பயனர் அவர்கள் வாக்களிக்க விரும்பும் கணக்கு(களுடன்) இணைப்பை ஏற்படுத்திக் கொள்ள முடியும்.
- புகுபதிகை செய்யப்பட்டதில் இணைக்கப்பட்ட கணக்குகளின் பட்டியலை

helpdesk.evoting@cdslindia.com என்ற முகவரிக்கு அனுப்ப வேண்டும். அந்தக் கணக்குகளுக்கு ஒப்புதல் பெறப்பட்டவுடன் அவர்களால் வாக்குகளைச் செலுத்த முடியும்.

- பாதுகாப்பாளர் சார்பாக அவர்கள் வழங்கிய நிர்வாகக் குழு தீர்மானம் மற்றும் பகர அதிகாரப் பத்திரம் (பவர் ஆப் அட்டார்னி-POA) அகியவை ஏதாவது இருந்தால் அவற்றின் ஸ்கேன் செய்யப்பட்ட நகல் சோதனையாளர் சரிபார்ப்புக்காக, பிடிஎப் வடிவில் அமைப்பில் பதிவேற்றம் செய்யப்பட வேண்டும்.

- தனிநபர் பங்குதாரரல்லாதவர்கள், சோதனையாளர் சரிபார்பதற்கான அதிகார கடிதத்தினை, மின்னனு அமைப்பில் பதிவேற்றம் செய்யாமல், தனிநபர் என்ற தளத்தில் வாக்கு பதிவு செய்திருந்தால், வாக்கு அளிப்பதற்கு அங்கீகாரம் பெற்றவர், நிர்வாக குழுவின் தீர்மானம், அதிகார கடிதம் முதலியவற்றை அங்கீகரிக்கப்பட்ட மாதிரி கையொப்பத்துடன், நிறுவன மின்னஞ்சல் tnielmf@gmail.com என்ற முகவரிக்கு அனுப்ப வேண்டும்.

**VC/OVAM மூலம் ஆண்டு பொதுக்குழு கூட்டத்தில் கலந்து கொள்ளும் பங்குதாரர்களுக்கான வழிமுறைகள் கீழே உள்ளன.**

1. ஆண்டு பொதுக்குழு கூட்டத்தின் நாளன்று மின்னியல் முறையில் வாக்களிப்பதற்கான வழிமுறைகள், மேலே குறிப்பிட்டுள்ள, தொலைதூர மின்னியல் வாக்கு அளிப்பதற்கான மேல் தெரிவிக்கப்ட்ட அதே முறையாகும்.

2. பங்குதாரர்கள் ஆண்டு பொதுக்குழு கூட்டத்தில் ஒலி / ஒளி காட்சி மூலமாக கலந்து கொள்வதற்கு CDSL மின்னனு வாக்கு அமைப்பு மூலம் வசதி செய்யப்பட்டுள்ளது. பங்குதாரர்கள் https://www.evotingindia.com என்ற வலைதளத்தில் பங்குதாரர்கள் / உறுப்பினர்கள் தொலைதூர மின்னனு உள் நுழைவு சான்றுகளை பயன்படுத்தி இந்த வசதியை அணுகலாம். ஒலி ஒளி காட்சி பிற ஒலி ஒளி காட்சிக்கான இணைப்பு பங்குதாரர்கள் / உறுப்பினர்களின் உள் நுழைவில் நிறுவனத்தின் EVSN காட்டப்படும்.

3. தொலைதூர மின்னியல் மூலம் வாக்களிக்கும் பங்குதாரர்கள் ஆண்டு பொது குழு கூட்டத்தில் கலந்து கொள்ள அனுமதி உண்டு, ஆனால் அவர்கள் பொது குழு கூட்டத்தில் வாக்களிக்க தகுதியில்லை.

   ஐபாட் மடிக்கணிணி மூலம், பங்குதாரர்கள் கூட்டத்தில் கலந்து கொள்ள ஊக்குவிக்கப்படுகிறார்கள்.

5. பங்குதாரர்கள், இடையூரில்லாமல் கூட்டத்தில் கலந்து கொள்வதற்கு. நல்ல வேகத்தில் உள்ள இணையதள சேவை மற்றும் புகைப்படக்கருவி தேவை.

6. கைபேசி, டேப்லெட் அல்லது மடிக்கணிணியை கைபேசி உறாட்ஸ்பாட் மூலம் இணைத்திருந்தால், சம்பந்தப்பட்ட வலைப்பின்னல்களில் ஏற்படும் ஏற்ற இறக்கங்களால். ஒலி / ஒளி இழப்பு ஏற்படலாம். எனவே மேற்கூறிய குறைபாடுகளை தவிர்க்க, நிலையான வைபை அல்லது LAN இணைப்பு பயன்படுத்துமாறு பரிந்துரைக்கப்படுகிறது.

7. பங்குதாரர்கள், தங்களுடைய கருத்தை தெரிவிக்க கேள்வி ஏதேனும் கூட்டத்தில் கேட்க வேண்டும் என்றால், அந்த கோரிக்கையை கூட்டம் நடைபெறும் 10 நாட்களுக்கு முன்பாக தனது பெயர், டிமேட் கணக்கு எண் போலியோ எண் / மின்னஞ்சல் முகவரி, கைபேசி எண் ஆகியவற்றை குறிப்பிட்டு tnielmf@gmail.com ல் பேச்சாளர் என்ற பதிவு செய்து கொள்ள வேண்டும். பொது குழு கூட்டத்தில் பேச விரும்பாத பங்குதாரர்கள், ஆனால், வினவல்கள் இருந்தால், கூட்டம் நடைபெறும் 10 நாட்களுக்கு முன்பாக தனது பெயர், டிமேட் கணக்கு எண் போலியோ எண் மின்னஞ்சல் முகவரி, கைபேசி எண் ஆகியவற்றை குறிப்பிட்டு tnielmf@gmail.com என்ற முகவரிக்கு அனுப்பலாம். நிறுவனத்தினரால் மின்னஞ்சல் முலமாக அந்த வினவல்களுக்கு பொருத்தமான பதில் அளிக்கப்படும்.

8. பேச்சாளர் என்று பதிவு செய்திருந்தால் மட்டுமே, கூட்டம் நடைபெறும் போது பங்குதாரர் அவர் கருத்தை / கேள்வி கேட்க அனுமதிக்கப்படுவர்.

9. கூட்டத்தில் கலந்து கொண்ட பங்குதாரர்கள், வாக்களிப்பதற்கு தடை செய்யப்படாதவராக இருந்தால் மட்டுமே, ஆண்டு பொது குழு கூட்டம் நடக்கும் போது மின்னியல் வாக்கு அளிப்பதற்கு தகுதியானவர்.

10. கூட்டத்தில் கலந்து கொள்ளும் பங்குதாரர்கள் மட்டுமே, பொதுக்குழு கூட்டம் நடைபெறும்போது, மின்னியல் மூலம் வாக்கு அளிக்க இயலும் என்பதால், ஆண்டு பொதுக்குழு ஒளி / ஒலி கூட்டம் நடைபெறும்போது கூட்டத்தில் கலந்து கொள்ளாமல் பங்குதாரர் மின்னியல் மூலம் வாக்களித்தால் அவ்வாறு அளித்த வாக்குகள் செல்லாத வாக்குகளாக கருதப்படும்.

**சேமிப்பகத்தில் (Depositories) தங்களுடைய மின்னஞ்சல் முகவரி மற்றும் கைப்பேசி எண் ஐ பதிவு செய்யாத பங்குதாரர்கள் அறிக்கையில் உள்ள தீர்மானத்தின் மீது வாக்கு அளிப்பதற்கு உள் நுழைவு சான்றுகள் பெறுவதற்கான செயல் முறைகள்.**

*1.* *தாள் வடிவத்தில் பங்குகளை வைத்திருக்கும் பங்குதாரர்கள், போலியோ எண். பங்குதாரரின் பெயர், ஸ்கேன் செய்த பங்குபத்திரத்தின் முன்பக்கம் மற்றும் பின்பக்கம் நகல், சுயசான்றளிக்கப்ட்ட* PAN *நகல் மற்றும் ஆதார் (சுய சான்றளிக்கப்பட்ட ஆதார் அட்டை) ஆகியவற்றை மின்னஞ்சல் முலம் நிறுவனத்திற்கும்* / RTA *க்கு அனுப்ப வேண்டும்.*

*2.* *பங்குகளை* Demat *ல் வைத்திருக்கும் பங்குதாரர்கள் :*

*உங்கள் மின்னஞ்சல்* ID *மற்றும் மொபைல் எண்களை உங்கள் டெப்பாசிட்டரியிடம் புதுப்பிக்கவும்.*

*3.* *தனிப்பட்ட* Demat *பங்குதாரர்கள் :*

*உங்கள் மின்னஞ்சல்* ID *மற்றும் மொபைல் எண்களை உங்கள் டெப்பாசிட்டரியிடம் புதுப்பிப்பது, நீங்கள் வாக்களிப்பதற்கும், பொது குழு கூட்டத்தில் கலந்து கொள்வதற்கும் கட்டாயமாகும்.*

- *ஆண்டு பொதுக்குழு கூட்டம் மற்றும் மின்னியல் வாக்களிப்பு தொடர்பாக ஏதாவது கேள்விகள் அல்லது பிரச்சினைகள் இருந்தால்* helpdesk.evoting@cdslindia.com *என்ற முகவரிக்கு எழுதவும். அல்லது கட்டணம் இல்லா தொலைபேசி எண் **1800 22 5533** ல் தொடர்பு கொள்ளவும்.*

  *மின்னனு முறையில் வாக்களிப்பதில் உள்ள வசதிகளில் குறைகள் ஏதேனும் இருப்பின், திரு. ராகேஷ் தால்வி, மேலாளர்* (CDSL) Central Depository Services (India) Limited, A Wing, 25th Floor, Marathon Future X, Mafatlal mill compounds, NM Joshi marg, lower panel (East), Mumbai – 400 013 *அல்லது* helpdesk.evoting@cdslindia.com *என்ற முகவரிக்கு மின்னஞ்சல் அனுப்பவும் அல்லது கட்டணம் இல்லா தொலைபேசி எண் **1800 22 5533** ல் தொடர்பு கொள்ளவும்.*

**பொது :**

*ஓட்டுரிமை என்பது உறுப்பினர்கள் **22.09.2023** அன்றைய கெடு தேதியில் வைத்திருக்கும் பங்குகளின் எண்ணிக்கையை பொருத்து தீர்மானிக்கப்படும். மேற்கூறிய தேதியில் பங்குகள் வைத்திருப்பவர்கள் மட்டுமே மின்னஞ்சல் முலம் ஓட்டளிக்க தகுதியுள்ளவராவார்.*

*இந்நிறுவனம் திரு. கே. இளங்கோவன், நிறுவன செயலர்-ஐ கண்காணிப்பாளராக அமர்த்தியுள்ளது. இவர் முழு மின்னஞ்சல் ஓட்டளிப்பையும் நியாயமான மற்றும் வெளிப்படையான முறையில் நடைபெற கண்காணிப்பார். ஓட்டளிப்பின் முடிவானது ஆண்டு பொதுக்கூட்டம் முடிவடைந்ததும் அறிவிக்கப்படும். ஓட்டளிப்பு முடிவும் கண்காணிப்பாளரின் அறிக்கையும் இந்நிறுவனத்தின் வெப்சைட்* www.teltn.com *ல் வெளியாகும்.*

## இயக்குநர் அறிக்கை

**பங்குதாரர்களுக்கு :**

*மார்ச் 31, 2023ம் நாளுடன் முடிவுடையும் ஆண்டிற்கான தணிக்கை செய்யப்பட்ட கணக்குகளுடன் உங்கள் நிறுவனத்தின் செயல்பாடுகளைப் பற்றிய 40ஆம் ஆண்டறிக்கையை உங்களுக்கு சமர்ப்பிப்பதில் உங்கள் இயக்குநர்கள் மகிழ்ச்சி அடைகிறார்கள்*

**நிதித்துவத்தின் சிறப்புக்கூறுகள் :**

*2022-2023 ஆம் ஆண்டில் உங்களது நிறுவனத்தின் செயல்பாடுகிளன் முக்கிய அம்சங்கள் பின்வருமாறு :*

| | பொருள் | 31.03.2023 நாளுடன் முடிந்த நடப்பாண்டு | 31.03.2022 நாளுடன் முடிந்த கடந்தாண்டு |
|---|---|---|---|
| அ. | விற்பனை | - | - |
| | | (ருபாய் இலட்சத்தில்) | (ருபாய் இலட்சத்தில்) |
| ஆ. | விற்பனை வருமானம் | 0.00 | 0.00 |
| இ. | பிற வருமானங்கள் | 369.38 | 462.61 |
| ஈ. | மொத்த செலவீனம் | 1636.88 | 1527.48 |
| உ. | நிகர இலாபம் (+) / நட்டம் (-) | -1267.50 | -1064.87 |

**செயல்பாடுகள் :**

*பரிசீலனையில் உள்ள வருடத்தில் இந்நிறுவனம் இயங்கவில்லை.*

**பங்காதாயம் :**

*நிறுவனத்தில் நட்டம் ஏற்பட்டதால், உங்கள் இயக்குநர்கள், இந்த ஆண்டிற்கு ஈவுத்தொகை பரிந்துரைக்கவில்லை.*

**வருட படிவத்தின் சாராம்சம் :**

*வருட படிவத்தின் சாராம்சம் அடங்கிய விரிவான விவரங்கள் படிவம் - MGT-9 (இணைப்பு - அ) இணைக்கப்பட்டுள்ளது.*

**பணியாளர் விவரங்கள் :**

*நிறுவனங்கள் சட்டம் 2013 மற்றும் விதி 5ன் நிறுவனங்கள் நிர்வாக பணியாளர்கள் (நியமனம் மற்றும் ஊதியம்) விதிகள் 2014ன் படி வரையறைக்கு மேல் ஊதியம் பெறும் பணியாளர்கள் இவ்வாண்டில் ஒருவருமில்லை.*

**இயக்குநர்கள் :**

*இந்த ஆண்டில் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர் திருமதி லில்லி, இ.ஆ.ப., அவர்களின் நியமனம் திரும்பப் பெற்று, 17.03.2023 முதல், திருமதி பூஜா குல்கர்ணி, இ.ஆ.ப., அவர்கள் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநராக நியமிக்கப்பட்டார்.*

*சுயேச்சை இயக்குநர்களான, டாக்டர் ஜி. நடராஜன் மற்றும் பேராசிரியர் பி.பி. தர் ஆகியோரின் பதவிக்காலம் முடிவடைகிறது. டாக்டர் மாரிமுத்து கார்த்திகேயன் மற்றும் டாக்டர் கோபால கிருஷ்ண ராஜு ஆகியோரை சுயேச்சை இயக்குநர்களாக முன்று வருடத்திற்கு நியமிக்க, இயக்குநர் குழு முன்மொழிந்துள்ளது. பங்குதாரரிடம் இருந்து, மேற்கூறியவர்களை, சுயேச்சை இயக்குநர்களாக நியமிப்பதற்கு, முன்மொழிவு கடிதம் எழுத்து பூர்வமாக நிறுவனம் பெற்றுள்ளது. இந்நிறுவனம், அனைத்து சுயேச்சை இயக்குநர்களிடம் இருந்து கம்பெனி சட்டம் 2013, பிரிவு 149(6) இன் தன்னிச்சையான இயக்குநர்களுக்கான அளவுகோலுடன் இருப்பதாக உறுதிமொழி பெற்றுள்ளது.*

**பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட காலப்பகுதியில் நடைபெற்ற இயக்குநர் குழு மற்றும் குழவின் கூட்டங்கள் :**

*பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட காலத்தில் நான்கு முறை இயக்குனர்கள் குழு கூடியது. தணிக்கையாளர் குழு நான்கு முறை கூடியது.*

*தணிக்கையாளர் குழு மூன்று இயக்குனர்களை கொண்டுள்ளது. அதில் இரண்டு இயக்குனர்கள் தன்னிச்சையான இருக்குனர்களாகும்.*

**தணிக்கையாளரின் அறிக்கை மீதான கருத்துக்கள் :**

தணிக்கையாளர் அறிக்கையில் குறிப்பிட்டுள்ள விலக்கப்பட்ட கருத்திற்கு அடிப்படை என்ற தலைப்பின்படி பிரிவு a to h ; k to m வரை உள்ள குறிப்புகள் தன்னிலை விளக்கம் தருபவைகளாக உள்ளன. இதனால் மேற்கொண்டு விளக்கங்கள் தேவையில்லை.

பிரிவு i : நிலுவையில் உள்ள தொகையை தள்ளுபடி செய்யுமாறு நிறுவனம் அரசிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

பிரிவு j : நிறுவனம் தீர்பாயத்தில் மேல்முறையீடு தாக்கல் செய்துள்ளது. தீர்ப்பு பெறப்பட்டபின் தக்க ஒதுக்கீடு செய்யப்படும்.

**கடன், உத்திரவாதம் அல்லது முதலீடு செய்யப்பட்டது பற்றிய விவரங்கள் :**

நிறுவனம் கடன் மற்றும் உத்திரவாதம் ஏதும் கொடுக்கவில்லை. நிறுவனம் எந்தவிதமான முதலீடும் செய்யவில்லை.

**தொடர்புடையவர்களுடன் ஏற்படுத்திக் கொண்ட ஒப்பந்தங்கள் மற்றும் ஏற்பாடுகளின் விவரங்கள் :**

கம்பெனிகள் சட்டம் 2013ன் படி தொடர்புடையவர்களுடன் ஏற்படுத்திக் கொண்ட பரிவர்த்தனைகள் வழக்கமான தொழில் முறைப்படி நடந்ததாகும். விலையும் வழக்கமான விலையாகும்.

**எரிசக்தி சேமிப்பு, தொழில் நுட்ப பயன்பாடு மற்றும் அன்னிய செலாவணி :**

பரிசீலனையில் உள்ள வருடத்தில் இந்நிறுவனம் இயங்காததால் நிறுவனங்கள் சட்டம் 2013 பிரிவு 134(3)(எம்) மற்றும் விதி எண் 8, நிறுவன (கணக்குகள்) விதிகள் பொருந்தாது.

**தற்போதைய வருடத்தின் நிதி நிலையை பாதிக்கும் முக்கியமான மாற்றங்கள் :**

இந்நிறுவனத்தின் ஒரே ஒரு ஊழியர் மட்டும் உள்ளார். அவர் அரசு துறையில் அயற்பணியில் உள்ளார். மேலும் அவர் ஆகஸ்ட் 2023 ல் ஓய்வு பெறுவார். அதற்கு பின்பு நிறுவனத்தில் நிரந்தர ஊழியர்கள் எவரும் இருக்க மாட்டார்கள்.

நிறுவனத்தின் ஆலையில் உள்ள தளவாடங்கள் மற்றும் இதர சொத்துக்களை விற்று அதில் வரும் தொகையை, அரசின் ஆணைப்படி நிலுவையிலுள்ள கடன்களை தீர்த்து வைப்பதற்காக பயன்படுத்தி வருகிறது.

**இயக்குநர்கள் உத்திரவாதம் :**

இயக்குநர்கள் கீழ்க்கண்ட விவரங்களை உறுதி செய்கின்றனர்

i) வருடக் கணக்கு தயாரிக்கப்படும்போது அனைத்து கணக்கியல் தரங்களும் பின்பற்றப்பட்டுள்ள. தரங்களின் முக்கியமான விலகல்கள் பற்றி தெளிவான விளக்கங்கள் கொடுக்கப்பட்டுள்ளன.

ii) இயக்குநர்கள் கணக்கியல் கொள்கைகளை மாற்றமில்லாமல் செயல்படுத்தி வந்துள்ளார்கள். நிதிநிலை முடிவுகளும், மதிப்பீடுகளும் விவரங்களுக்கு எற்பவும் விவேகமாகவும் உள்ளன. இதனால் நிதியாண்டில் இலாபக்கணக்கும் நிறுவனத்தின் நிலைமையும் உண்மையாகவும், தெளிவாகவும் பிரதிபலிக்கின்றன.

iii) நிறுவனங்கள் சட்டத்தின்படி, நிறுவனத்தின் சொத்துக்களை பாதுகாக்கவும் தவறுகள்/ முறைகேடுகளை தடுக்கவும் தேவைக்கேற்ற கணக்குப் பதிவேடுகளை பராமரிக்க இயக்குநர்கள் சீரிய கவனம் செலுத்தி வருகின்றனர்.

iv) வருடக் கணக்குளை இயங்கும் நிறுவனம் என்ற அடிப்படையின் பேரில் இயக்குநர்கள் தயாரித்துள்ளனர்.

v) இயக்குநர்கள், அனைத்து சட்ட விதிகள், இணக்கமாக இருப்பதற்கு உறுதி செய்ய முறையான அமைப்பு திட்டமிட்டுள்ளனர். மேலும் அந்த அமைப்பு போதுமானதாகவும் திறம்படவும் செயல்படுகிறது.

**நிலையான வைப்பு :**

இந்த வருடத்தில், நிறுவனம் நிலையான வைப்பு தொகை ஏற்றுக் கொள்ளவோ. புதுப்பிக்கவோ இல்லை. 31.03.2023 அன்று நிறுவனத்தில் கோரப்படாத நிலையான வைப்பு ஏதும் நிலுவையில் இல்லை.

**நன்றி :**

மத்திய அரசு, மாநில அரசு, நிதி நிறுவனங்கள், மற்றும் இதர முக்கிய முகவர்கள் வழங்கி வரும் உறுதுணைக்கும், ஆதரவிற்கும் இயக்குநர்கள் தங்களின் நன்றியை தெரிவித்துக் கொள்கிறார்கள். மேலும் தொடர்ந்து ஆதரவை நல்கிய பங்குதாரர்களுக்கு இயக்குநர்கள் குழு தங்கள் நன்றியை தெரிவித்துக் கொள்கிறது.

இடம் சென்னை 35
நாள் 01.09.2023

இயக்குநரவைக்காக
**பூஜா குல்கர்ணி, இ.ஆ.ப.,**
தலைவி மற்றும் நிர்வாக இயக்குநர்

இணைப்பு – அ

**I. பதிப்பு மற்றும் இதர விவரங்கள்**

| | | |
|---|---|---|
| i) | நிறுவனத்தின் குறிப்பு எண். | L31501TN1983SGC009836 |
| ii) | பதிப்பு நாள். | 09.02.1983 |
| iii) | நிறுவனத்தின் பெயர் | தமிழ்நாடு தொழில் வெடிமருந்து நிறுவனம் |
| iv) | பிரிவு / உட்பிரிவு | பங்கு மூலதனத்தைப் பெற்றுள்ள பொது நிறுவனம் |
| v) | பதிவு அலுவலக முகவரி மற்றும் தொடர்பு கொள்ள வேண்டிய விவரம் | *ஆவின் இல்லம், 3வது தளம், 3*A, *பசும்பொன் முத்துராமலிங்கனார் தெரு நந்தனம், சென்னை* **– 600 035** |
| vi) | பட்டியலிடப்பட்ட நிறுவனமா ? | இல்லை. |
| vii) | பதிவாளர் மற்றும் பங்கு மாற்ற தரகரின் பெயர், முகவரி மற்றும் தொடர்பு கொள்ள வேண்டிய விவரம் | கேமியோ கார்போரெட் சர்வீஸஸ் லிமிடெட், சுப்ரமணியன் கட்டிடம், எண்.1, கிளப் உறவுஸ் ரோடு, சென்னை – 600 002. தொலைபேசி – 044–28461073, 28460390, இமெயில் – investor@cameoindia.com |

**II. நிறுவனத்தின் மொத்த விற்பனையின் 10 விழுக்காடு மற்றும் மேலாக அளித்து வரும் அனைத்து வியாபார செயல்பாடுகளை தெரிவித்தல்.**

*இந்நிறுவனம் உற்பத்தியை நிறுத்தி விட்டதால், இது பொருந்தாது,*

**III. துணை மற்றும் சார்பு நிறுவனங்கள் விவரம் இல்லை**

இணைப்பு –ஆ

**IV (i) பிரிவு வாரியாக பங்குதாரர்கள்**

IV. பங்குகளின் வகை (நேர்மை பங்கு மூலதனத்தின் மொத்த பங்கில் சதவிகித புள்ளி விவரம்)

(i).பிரிவு வாரியாக பங்குகள்

| | | |
|---|---|---|
| நிறுவனத்தின் பெயர் | : | தமிழ்நாடு தொழில் வெடிமருந்து நிறுவனம் |
| முகமதிப்பு | : | ரூ.10/– |
| 01.04.2022–ல் செலுத்தப்பெற்ற பங்குகள் | : | 26956800 |
| 31.03.2023–ல் செலுத்தப்பெற்ற பங்குகள் | : | 26956800 |
| காலமுதற் கொண்டு தேதி வரையிலான | : | 01.04.2022 முதல் 31.03.2023 வரை |

| பிரிவு குறியீடு | பங்குதாரரின் பிரிவு | தொடக்க ஆண்டில் பெற்றிருந்த பங்குகள் | | | | ஆண்டு இறுதியில் பெற்றிருந்த பங்குகள் | | | | நடப்பாண்டு சதவிகித மாற்றம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | டிமேட் | நேரிடையாக | மொத்தம் | மொத்த பங்குகளின் சதவிகிதம் | டிமேட் | நேரிடையாக | மொத்தம் | மொத்த பங்குகளின் சதவிகிதம் | |
| A. | பங்குகளின் நிறுவனம்மற்றும் நிறுவனவர்க்கம் | | | | | | | | | |
| 1 | இந்தியன் | | | | | | | | | |
| a. | தனிநபர்/இந்துபிரிவினை யற்றகுடும்பம் | 0 | 0 | 0 | 0.0000 | 0 | 0 | 0 | 0.0000 | 0.0000 |
| b. | நடுவண் அரசு/மாநில அரசு(கள்) | 0 | 22141400 | 22141400 | 82.14 | 0 | 22141400 | 22141400 | 82.14 | 0.0000 |
| c. | நிறுவன அமைப்பு | 0 | 0 | 0 | 0.0000 | 0 | 0 | 0 | 0.0000 | 0.0000 |
| d. | நிதிஸ்தாபனங்கள்/வங்கிகள் | 0 | 0 | 0 | 0.0000 | 0 | 0 | 0 | 0.0000 | 0.0000 |
| e. | இதர | | | | | | | | | |
| | மொத்தம்(A)(1) | 0 | 22141400 | 22141400 | 82.14 | 0 | 22141400 | 22141400 | 82.14 | 0.0000 |
| 2 | வெளிநாடு | | | | | | | | | |
| a. | தனிநபர் (இந்தியர்அல்லாத தனிநபர்/அந்நியநாட்டு தனிநபர் | 0 | 0 | 0 | 0.0000 | 0 | 0 | 0 | 0.0000 | 0.0000 |
| b. | நிறுவன அமைப்பு | 0 | 0 | 0 | 0.0000 | 0 | 0 | 0 | 0.0000 | 0.0000 |
| c. | ஸ்தாபனங்கள் | 0 | 0 | 0 | 0.0000 | 0 | 0 | 0 | 0.0000 | 0.0000 |
| d. | தகுதிவாய்ந்தவெளிநாட்டு முதலீட்டாளர் | 0 | 0 | 0 | 0.0000 | 0 | 0 | 0 | 0.0000 | 0.0000 |
| e. | இதர | | | | | | | | | |
| | மொத்தம்(A)(2) | 0 | 0 | 0 | 0.0000 | 0 | 0 | 0 | 0.0000 | 0.0000 |
| | ஸ்தாபகர்குழுமற்றும் ஸ்தாபகர்பெற்றுள்ளமொத்த பங்குகள்(A)(=(A)(1)+(A)(2) | 0 | 22141400 | 22141400 | 82.14 | 0 | 22141400 | 22141400 | 82.14 | 0.0000 |
| B. | பொதுஜனபங்குகள் | | | | | | | | | |
| 1 | ஸ்தாபனங்கள் | | | | | | | | | |
| a. | பரஸ்பரநிதிகள்/ஐக்கிய வர்த்தகஸ்தாபனங்கள் | 0 | 0 | 0 | 0.0000 | 0 | 0 | 0 | 0.0000 | 0.0000 |
| b. | நிதி நிறுவனங்கள் / வங்கிகள் | 666725 | 1333750 | 2000475 | 7.42 | 666725 | 1333750 | 2000475 | 7.42 | 0.0000 |
| c. | நடுவண் அரசு / மாநில அரசு (கள்) | 0 | 0 | 0 | 0.0000 | 0 | 0 | 0 | 0.0000 | 0.0000 |
| d. | திட்ட மூலதன நிதிகள் | 0 | 0 | 0 | 0.0000 | 0 | 0 | 0 | 0.0000 | 0.0000 |
| e. | காப்பீட்டு நிறுவனங்கள் | 0 | 0 | 0 | 0.0000 | 0 | 0 | 0 | 0.0000 | 0.0000 |
| f. | அந்நிய நிறுவன முதலீட்டாளர்கள் | 0 | 0 | 0 | 0.0000 | 0 | 0 | 0 | 0.0000 | 0.0000 |
| g. | அந்நிய திட்ட மூலதன முதலீட்டாளர்கள் | 0 | 0 | 0 | 0.0000 | 0 | 0 | 0 | 0.0000 | 0.0000 |
| h. | தகுதிவாய்ந்த அந்நிய முதலீட்டாளர் | 0 | 0 | 0 | 0.0000 | 0 | 0 | 0 | 0.0000 | 0.0000 |
| i. | இதர | | | | | | | | | |
| | மொத்தம் (B) (1) | 666725 | 1333750 | 2000475 | 7.42 | 666725 | 1333750 | 2000475 | 7.42 | 0.0000 |

## IV (i) பிரிவு வாரியாக பங்குதாரர்கள்

| பிரிவு குறியீடு | பங்குதாரரின் பிரிவு | தொடக்க ஆண்டில் பெற்றிருந்த பங்குகள் | | | | ஆண்டு இறுதியில் பெற்றிருந்த பங்குகள் | | | | நடப்பாண்டு சதவிகித மாற்றம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | டிமேட் | நேரிடையாக | மொத்தம் | மொத்த பங்குகளின் சதவிகிதம் | டிமேட் | நேரிடையாக | மொத்தம் | மொத்த பங்குகளின் சதவிகிதம் | |
| A. | பங்குகளின் நிறுவனம்மற்றும் நிறுவனவர்க்கம் | | | | | | | | | |
| 1 | இந்தியன் | | | | | | | | | |
| a. | தனிநபர்/இந்துபிரிவினை யற்றகுடும்பம் | 0 | 0 | 0 | 0.0000 | 0 | 0 | 0 | 0.0000 | 0.0000 |
| b. | நடுவண் அரசு/மாநில அரசு(கள்) | 0 | 22141400 | 22141400 | 82.14 | 0 | 22141400 | 22141400 | 82.14 | 0.0000 |
| c. | நிறுவன அமைப்பு | 0 | 0 | 0 | 0.0000 | 0 | 0 | 0 | 0.0000 | 0.0000 |
| d. | நிதிஸ்தாபனங்கள்/வங்கிகள் | 0 | 0 | 0 | 0.0000 | 0 | 0 | 0 | 0.0000 | 0.0000 |
| e. | இதர | | | | | | | | | |
| | மொத்தம் (A)(1) | 0 | 22141400 | 22141400 | 82.14 | 0 | 22141400 | 22141400 | 82.14 | 0.0000 |
| 2 | வெளிநாடு | | | | | | | | | |
| a. | தனிநபர் (இந்தியர் அல்லாத தனிநபர்/அந்நியநாட்டு தனிநபர் | 0 | 0 | 0 | 0.0000 | 0 | 0 | 0 | 0.0000 | 0.0000 |
| b. | நிறுவன அமைப்பு | 0 | 0 | 0 | 0.0000 | 0 | 0 | 0 | 0.0000 | 0.0000 |
| c. | ஸ்தாபனங்கள் | 0 | 0 | 0 | 0.0000 | 0 | 0 | 0 | 0.0000 | 0.0000 |
| d. | தகுதிவாய்ந்த வெளிநாட்டு முதலீட்டாளர் | 0 | 0 | 0 | 0.0000 | 0 | 0 | 0 | 0.0000 | 0.0000 |
| e. | இதர | | | | | | | | | |
| | மொத்தம் (A)(2) | 0 | 0 | 0 | 0.0000 | 0 | 0 | 0 | 0.0000 | 0.0000 |
| | ஸ்தாபகர் குழு மற்றும் ஸ்தாபகர் பெற்றுள்ள மொத்த பங்குகள் (A)(=(A)(1) + (A)(2) | 0 | 22141400 | 22141400 | 82.14 | 0 | 22141400 | 22141400 | 82.14 | 0.0000 |
| B. | பொதுஜன பங்குகள் | | | | | | | | | |
| 1 | ஸ்தாபனங்கள் | | | | | | | | | |
| a. | பரஸ்பர நிதிகள்/ஐக்கிய வர்த்தகஸ்தாபனங்கள் | 0 | 0 | 0 | 0.0000 | 0 | 0 | 0 | 0.0000 | 0.0000 |
| b. | நிதி நிறுவனங்கள் / வங்கிகள் | 666725 | 1333750 | 2000475 | 7.42 | 666725 | 1333750 | 2000475 | 7.42 | 0.0000 |
| c. | நடுவண் அரசு / மாநில அரசு (கள்) | 0 | 0 | 0 | 0.0000 | 0 | 0 | 0 | 0.0000 | 0.0000 |
| d. | திட்ட மூலதன நிதிகள் | 0 | 0 | 0 | 0.0000 | 0 | 0 | 0 | 0.0000 | 0.0000 |
| e. | காப்பீட்டு நிறுவனங்கள் | 0 | 0 | 0 | 0.0000 | 0 | 0 | 0 | 0.0000 | 0.0000 |
| f. | அந்நிய நிறுவன முதலீட்டாளர்கள் | 0 | 0 | 0 | 0.0000 | 0 | 0 | 0 | 0.0000 | 0.0000 |
| g. | அந்நிய திட்ட மூலதன முதலீட்டாளர்கள் | 0 | 0 | 0 | 0.0000 | 0 | 0 | 0 | 0.0000 | 0.0000 |
| h. | தகுதிவாய்ந்த அந்நிய முதலீட்டாளர் | 0 | 0 | 0 | 0.0000 | 0 | 0 | 0 | 0.0000 | 0.0000 |
| i. | இதர | | | | | | | | | |
| | மொத்தம் (B) (1) | 666725 | 1333750 | 2000475 | 7.42 | 666725 | 1333750 | 2000475 | 7.42 | 0.0000 |

## IV (ii) பிரிவு வாரியாக பங்குதாரர்கள்

IV. பங்குகளின் வகை (நேர்மை பங்கு மூலதனத்தின் மொத்த பங்கில் சதவிகித புள்ளி விவரம்) (தொடர்ச்சி)

(ii),அபிவிருத்தியாளர்களின் பங்கு

நிறுவனத்தின் பெயர் : தமிழ்நாடு தொழில் வெடிமருந்து நிறுவனம்

| | | தொடக்க ஆண்டில் பெற்றிருந்த பங்குகள் | | | ஆண்டு இறுதியில் பெற்றிருந்த பங்குகள் | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| வ எண் | பங்கு தாரர்களின் பெயர் | பங்குகளின் எண்ணிக்கை | நிறுவனத்தின் மொத்த சதவிகித பங்குகள் | மொத்த பங்கிற்கு அடமானம்/ வில்லங்க பங்குகளின் சதவிகிதம் | பங்குகளின் எண்ணிக்கை | நிறுவனத்தின் மொத்த சதவிகித பங்குகள் | மொத்த பங்கிற்கு அடமானம்/ வில்லங்க பங்குகளின் சதவிகிதம் | நடப்பாண்டு பங்கு சதவிகித மாற்றம் | ஆண்டு தொடக்கத்தில் அடமானம் வைக்கப்பட்ட பங்குகள் | ஆண்டு இறுதியில் அடமானம் வைக்கப்பட்ட பங்குகள் |
| 1 | தமிழக கவர்னர் | 22141400 | 82.14 | 0 | 22141400 | 82.14 | 0 | 0 | 0 | 0 |

## IV (iii) அபிவிருத்தியாளர்களில் மாற்றம்

IV. பங்குகளின் வகை (நேர்மை பங்கு மூலதனத்தின் மொத்த பங்கில் சதவிகித புள்ளி விவரம்) (தொடர்ச்சி)

(iii),அபிவிருத்தியாளர்களின் பங்கு மாற் றம் (மாற்றம் எதுவுமில்லையெனில் தயவு செய்து குறிப்பிடுக).

நிறுவனத்தின் பெயர் : தமிழ்நாடு தொழில் வெடிமருந்து நிறுவனம்

| வ எண் | பங்கு தாரர்களின் பெயர் | தொடக்க ஆண்டில் பெற்றிருந்த பங்குகள் | | நடப்பாண்டில் திரளாக சேர்ந்த பங்குகள் | |
|---|---|---|---|---|---|
| | | பங்குகளின் எண்ணிக்கை | நிறுவனத்தின் மொத்த சதவிகித பங்குகள் | பங்குகளின் எண்ணிக்கை | நிறுவனத்தின் மொத்த சதவிகித பங்குகள் |
| 1 | தமிழக கவர்னர் | | | | |
| | 01.04.2022 தொடக்க ஆண்டில் | 22141400 | 82.14 | 22141400 | 82.14 |
| | 31.03.2023 இறுதி ஆண்டில் | 22141400 | 82.14 | 22141400 | 82.14 |

### IV. பங்குகளின் வகை (நேர்மை பங்கு மூலதனத்தின் மொத்த பங்கில் சதவிகித புள்ளி விவரம்) (தொடர்ச்சி)

(iv),தரவரிசையில் முதல் பத்து பங்குதாரர்கள் பெற்றிருக்கும் பங்குகளின் வகைகள் (இயக்குனர்கள், அபிவிருத்தியாளர்கள், பன்னாட்டு மற்றும் அமெரிக்க மூலதன அங்கத்தினர்களின் பங்குகள் தவிர)

நிறுவனத்தின் பெயர் : தமிழ்நாடு தொழில் வெடிமருந்து நிறுவனம்

| வ எண். | பங்கு தாரர்களின் பெயர் | தொடக்க ஆண்டில் பெற்றிருந்த பங்குகள் | | நடப்பாண்டில் திரளாக சேர்ந்த பங்குகள் | |
|---|---|---|---|---|---|
| | | பங்குகளின் எண்ணிக்கை | நிறுவனத்தின் மொத்த சதவிகித பங்குகள் | பங்குகளின் எண்ணிக்கை | நிறுவனத்தின் மொத்த சதவிகித பங்குகள் |
| 1 | இண்டஸ்டிரியல் டெவலப்மெண்ட் பாங்க் ஆப்இந்தியா | | | | |
| | 01.04.2022 – ஆம் ஆண்டின் தொடக்கத்தில் | 666625 | 2.4729 | 666625 | 2.4729 |
| | 31.03.2023 – ஆம் ஆண்டின் இறுதியில் | 666625 | 2.4729 | 666625 | 2.4729 |
| 2 | இண்டஸ்டிரியல் டெவலப்மெண்ட் பாங்க் ஆப்இந்தியா | | | | |
| | 01.04.2022 – ஆம் ஆண்டின் தொடக்கத்தில் | 666625 | 2.4729 | 666625 | 2.4729 |
| | 31.03.2023 – ஆம் ஆண்டின் இறுதியில் | 666625 | 2.4729 | 666625 | 2.4729 |
| 3 | ஐ.எப்.சி.ஐ. லிமிடெட் | | | | |
| | 01.04.2022 – ஆம் ஆண்டின் தொடக்கத்தில் | 666625 | 2.4729 | 666625 | 2.4729 |
| | 31.03.2023 – ஆம் ஆண்டின் இறுதியில் | 666625 | 2.4729 | 666625 | 2.4729 |
| 4 | ஆம்ரெக்ஸ் மார்க்கெட்டிங் பிரைவேட் லிமிடெட் | | | | |
| | 01.04.2022 – ஆம் ஆண்டின் தொடக்கத்தில் | 666625 | 2.4729 | 666625 | 2.4729 |
| | 31.03.2023 – ஆம் ஆண்டின் இறுதியில் | 666625 | 2.4729 | 666625 | 2.4729 |
| 5 | எஸ்.பி.ஐ. கேபிடல் மார்க்கெட்.ஸ் லிமிடெட் A/C JT 1 - எஸ்.பி.ஐ. மியூச்சுவல் பண்ட்ஸ், | | | | |
| | 01.04.2022 – ஆம் ஆண்டின் தொடக்கத்தில் | 14400 | 0.0534 | 14400 | 0.0534 |
| | 31.03.2023 – ஆம் ஆண்டின் இறுதியில் | 14400 | 0.0534 | 14400 | 0.0534 |
| 6 | சுதீஷ் குமார் | | | | |
| | 01.04.2022 – ஆம் ஆண்டின் தொடக்கத்தில் | 10300 | 0.0382 | 10300 | 0.0382 |
| | 31.03.2023 – ஆம் ஆண்டின் இறுதியில் | 10300 | 0.0382 | 10300 | 0.0382 |
| 7 | பழனி சுவாமி.எம். | | | | |
| | 01.04.2022 – ஆம் ஆண்டின் தொடக்கத்தில் | 10000 | 0.0370 | 10000 | 0.0370 |
| | 31.03.2023 – ஆம் ஆண்டின் இறுதியில் | 10000 | 0.0370 | 10000 | 0.0370 |
| 8 | ஆறுமுகசாமி.ஒ. | | | | |
| | 01.04.2022 – ஆம் ஆண்டின் தொடக்கத்தில் | 10000 | 0.0370 | 10000 | 0.0370 |
| | 31.03.2023 – ஆம் ஆண்டின் இறுதியில் | 10000 | 0.0370 | 10000 | 0.0370 |
| 9 | மதுசூதன் டி. மராத்தே | | | | |
| | 01.04.2022 – ஆம் ஆண்டின் தொடக்கத்தில் | 8100 | 0.0300 | 8100 | 0.0300 |
| | *விற்பனை* | –8100 | 0.0300 | 0 | –0.0300 |
| | 31.03.2023 – ஆம் ஆண்டின் இறுதியில் | 0 | 0 | 0 | 0 |
| 10 | துரை பச்சையப்பன் | | | | |
| | 01.04.2022 – ஆம் ஆண்டின் தொடக்கத்தில் | 8000 | 0.0296 | 8000 | 0.0296 |
| | 31.03.2023 – ஆம் ஆண்டின் இறுதியில் | 8000 | 0.0296 | 8000 | 0.0296 |
| 11 | *சுதா மதுசூதன் மராத்தே* | | | | |
| | 01.04.2022 – ஆம் ஆண்டின் தொடக்கத்தில் | 0 | 0 | 0 | 0 |
| | *வாங்கியது* | 8100 | 0.0300 | 8100 | 0.0300 |
| | 31.03.2023 – ஆம் ஆண்டின் இறுதியில் | 8100 | 0.0300 | 8100 | 0.0300 |

**V. பங்குகளின் வகை (நேர்மை பங்கு மூலதனத்தின் மொத்த பங்கில் சதவிகித புள்ளி விவரம்) (தொடர்ச்சி)**

(v), பங்குகளை நிர்வகிக்கும் இயக்குனர்கள் மற்றும் முக்கிய நிர்வாக அங்கத்தினர்கள்

நிறுவனத்தின் பெயர் : தமிழ்நாடு தொழில் வெடிமருந்து நிறுவனம்

| வ எண் | பங்குதாரர்களின் பெயர் | தொடக்க ஆண்டில்பெற்றிருந்தபங்குகள் | | நடப்பாண்டில்திரளாகசேர்ந்தபங்குகள் | |
|---|---|---|---|---|---|
| | | பங்குகளின் எண்ணிக்கை | நிறுவனத்தின் மொத்தசதவிகித பங்குகள் | பங்குகளின் எண்ணிக்கை | நிறுவனத்தின் மொத்தசதவிகித பங்குகள் |
| 1 | திருமதி. ஆர். லில்லி, இ.ஆ.ப., | இல்லை | இல்லை | இல்லை | இல்லை |
| | 01.04.2022–ஆம் ஆண்டின் தொடக்கத்தில் | இல்லை | இல்லை | இல்லை | இல்லை |
| | 31.03.2023–ஆம் ஆண்டின் இறுதியில் | இல்லை | இல்லை | இல்லை | இல்லை |
| 2 | திருமதி. பூஜா குல்கர்னி, இ.ஆ.ப., | இல்லை | இல்லை | இல்லை | இல்லை |
| | 01.04.2022–ஆம் ஆண்டின் தொடக்கத்தில் | இல்லை | இல்லை | இல்லை | இல்லை |
| | 31.03.2023–ஆம் ஆண்டின் இறுதியில் | இல்லை | இல்லை | இல்லை | இல்லை |
| 3 | திரு. சி. ஆர். பாலாஜி | இல்லை | இல்லை | இல்லை | இல்லை |
| | 01.04.2022–ஆம் ஆண்டின் தொடக்கத்தில் | இல்லை | இல்லை | இல்லை | இல்லை |
| | 31.03.2023–ஆம் ஆண்டின் இறுதியில் | இல்லை | இல்லை | இல்லை | இல்லை |
| 4 | திரு. பாரத் பி. தர் | இல்லை | இல்லை | இல்லை | இல்லை |
| | 01.04.2022–ஆம் ஆண்டின் தொடக்கத்தில் | இல்லை | இல்லை | இல்லை | இல்லை |
| | 31.03.2023–ஆம் ஆண்டின் இறுதியில் | இல்லை | இல்லை | இல்லை | இல்லை |
| 5 | திரு. ஜி. நடராஜன் | இல்லை | இல்லை | இல்லை | இல்லை |
| | 01.04.2022–ஆம் ஆண்டின் தொடக்கடத்தில் | இல்லை | இல்லை | இல்லை | இல்லை |
| | 31.03.2023–ஆம் ஆண்டின் இறுதியில் | இல்லை | இல்லை | இல்லை | இல்லை |
| 6 | திரு. நாகசுப்பிரமணியன் | இல்லை | இல்லை | இல்லை | இல்லை |
| | 01.04.2022–ஆம் ஆண்டின் தொடக்கத்தில் | இல்லை | இல்லை | இல்லை | இல்லை |
| | 31.03.2023–ஆம் ஆண்டின் இறுதியில் | இல்லை | இல்லை | இல்லை | இல்லை |
| 7 | திருமதி. மேரி ஸ்டெல்லா கரோலின் | இல்லை | இல்லை | இல்லை | இல்லை |
| | 01.04.2022–ஆம் ஆண்டின் தொடக்கத்தில் | இல்லை | இல்லை | இல்லை | இல்லை |
| | 31.03.2023–ஆம் ஆண்டின் இறுதியில் | இல்லை | இல்லை | இல்லை | இல்லை |

**V. பி. நிறுவனத்தின் கொடுபட வேண்டியவை வட்டி உட்பட / சேர்ந்தவை ஆனால் செலுத்தப்பட வேண்டியது அல்ல.**

தொகை ரூபாயில்

| நிதியாண்டின் தொடக்கத்தில் கொடுபட வேண்டியவை | பிணைய கடன்கள் வைப்பு நீங்கலாக | பிணையம் அல்லாத கடன்கள் | வைப்புகள் | மொத்த கொடுபட வேண்டியவை |
|---|---|---|---|---|
| i) அசல் தொகை | 0 | 1389301066 | 0.00 | 1389301066 |
| ii) வட்டி செலுத்த வேண்டியது, ஆனால் செலுத்தப்படாதது | 61013 | 850341047 | 0.00 | 850402060 |
| iii) வட்டி செலுத்தவுள்ளது ஆனால் செலுத்தப்பட வேண்டியது அல்ல. | 0 | 0.00 | 0.00 | 0.00 |
| மொத்தம் (i+ii+iii) | 61013 | 22396428013 | 0.00 | 2239703126 |
| நடப்பு ஆண்டில் கொடுபட வேண்டியதில் மாற்றம் | பிணையகடன்கள் வைப்பு நீங்கலாக | பிணையம் அல்லாத கடன்கள் | வைப்புகள் | மொத்த கொடுபட வேண்டியவை |
| * கூடுதலானது | 0 | 125840619 | 0 | 125840619 |
| * குறைந்தவை | 0 | 0 | 0 | 0 |
| நிகர மாற்றம் | 0 | 125840619 | 0 | 125840619 |
| நிதியாண்டின் இறுதியில் கொடுபட வேண்டியவை | பிணையகடன்கள் வைப்பு நீங்கலாக | பிணையம் அல்லாத கடன்கள் | வைப்புகள் | மொத்த கொடுபட வேண்டியவை |
| i) அசல் தொகை | 0 | 1389301066 | 0.00 | 1389301066 |
| ii) வட்டி செலுத்த வேண்டியது, ஆனால் செலுத்தப்படாதது | 61013 | 976181666 | 0.00 | 976242679 |
| iii) வட்டி செலுத்தவுள்ளது ஆனால் செலுத்தப்பட வேண்டியது அல்ல. | 0 | 0 | 0.00 | 0 |
| மொத்தம் (i+ii+iii) | 61013 | 2365482732 | 0.00 | 2365543745 |

## VI. இயக்குனர்களின் ஊதியம் மற்றும் முக்கிய நிர்வகிக்கும் நபர்கள்

A. நிர்வாக இயக்குனரின் ஊதியம், முழுநேர இயக்குனர்கள் மற்றும் / அல்லது மேலாளர்;

திருவாளர் சி.காமராஜ், இ.ஆ.ப., தலைவர் மற்றும் நிர்வாக இயக்குனர் (பொறுப்பு) அவர்களின் ஊதிய விவரங்கள்

ரூ, இலட்சத்தில்

| வஎண். | ஊதிய விவரங்கள் | ஊதிய விவரங்கள் (ரூபாய் இலட்சத்தில்) | |
|---|---|---|---|
| 1 | மொத்த ஊதியம் | | திருமதி. பூஜா குல்கர்னி, இ.ஆ.ப., |
| | (a).ஒதுக்கீடுகளுக்கு உட்பட்ட ஊதியம் | 5.06 | – |
| | (b).பிரிவு 17(2)ன் படி இலாபத்தின் மதிப்பு | இல்லை | இல்லை |
| | (c).பிரிவின் கீழ் ஊதியத்திற்கு பதிலாக கிடைத்த இலாபம் | இல்லை | இல்லை |
| 2 | பங்கு தேர்வு | இல்லை | இல்லை |
| 3 | வியர்வை பங்கு | இல்லை | இல்லை |
| 4 | தரகு | இல்லை | இல்லை |
| | இலாப சதவிகிதம் | இல்லை | இல்லை |
| | இதர, குறிப்பிடவும் .. | இல்லை | இல்லை |
| 5 | இதர, தயவு செய்து குறிப்பிடவும். | இல்லை | இல்லை |
| | மொத்தம் (A) | 5.06 | இல்லை |
| | சட்டப்படி அதிக பட்சம் | பொருந்தாது. | பொருந்தாது. |

## B இதர இயக்குனர்களின் ஊதியம் :

| வஎண். | ஊதியவிவரங்கள் | இயக்குனர்களின் பெயர் | மொத்த தொகை |
|---|---|---|---|
| | | டாக்டர். ஜிநடராஜன்<br>பேராசிரியர் பரத் பி தர்<br>திரு. சி. ஆர். பாலாஜி | இல்லை<br>இல்லை<br>இல்லை |
| 1 | சுயமான இயக்குனர்கள் | டாக்டர். ஜிநடராஜன் | பரத் பி தர் |
| | இயக்குனரவையில் கலந்து கொள்ள கட்டணம் | 42000 | 45000 |
| | தரகு | இல்லை | இல்லை |
| | இதர, தெரிவிக்கவும் | இல்லை | இல்லை |
| | மொத்தம் (1) | 42000 | 45000 |
| 2 | இதர அதிகாரம் அல்லாத | | |
| | இயக்குனரவையில் கலந்து கொள்ள கட்டணம் | | |
| | தரகு | இல்லை | இல்லை |
| | இதர, தெரிவிக்கவும் | இல்லை | இல்லை |
| | மொத்தம் (2) | இல்லை | இல்லை |
| | மொத்தம் (B) = (1+2) | 42000 | 45000 |
| | மொத்த நிர்வகிப்பவர்களின் ஊதியம் | 42000 | 45000 |
| | சட்டப்படி எல்லாவற்றிற்கும் மேலான அதிகபட்சம் | இல்லை | இல்லை |

## C. நிர்வாக இயக்குனர் / மேலாளர் / WTD தவிர முக்கிய நிர்வாக உறுப்பினர்களின் ஊதியம்

ரூ, இலட்சட்தில்

| வ.எண். | முக்கிய நிர்வாக உறுப்பினர்களின் ஊதி விவரங்கள் | | |
|---|---|---|---|
| 1 | மொத்த ஊதியம் | நிறுவன செயலர் | தலைமை கணக்கியலாளர் |
| | (a).ஒதுக்கீடுகளுக்கு உட்பட்ட ஊதியம் | 12.28 | 3.63 |
| | (b).பிரிவு 17(.2)ன் படி இலாபத்தின் மதிப்பு | 0 | 0 |
| | (c).பிரிவின் கீழ் ஊதியத்திற்கு பதிலாக கிடைத்த இலாபம் | 0 | 0 |
| 2 | பங்கு தேர்வு | 0 | 0 |
| 3 | வியர்வை பங்கு | 0 | 0 |
| 4 | தரகு | | |
| | இலாப சதவிகிதம் | 0 | 0 |
| | இதர, குறிப்பிடவும் .. | 0 | 0 |
| 5 | இதர, தயவு செய்து குறிப்பிடவும்.. | 0 | 0 |
| | மொத்தம் | 12.28 | 3.63 |

## VII. அபராதங்கள் / தண்டனை / கூட்டு குற்றங்கள்

| வகை | நிறுவனசட்டத்தின் பிரிவு | விவரங்களின் சுருக்கம் | அபராதத்தின்விவரங்கள் / தண்டனை/ விதிக்கப்பட்ட கூடுதல்கட்டணம் | அதிகாரம் (RD/ NCLT/ COURT) | மேல் முறையீடு ஏதாவது இருப்பின் (விவரங்கள் கொடுக்கவும்) |
|---|---|---|---|---|---|
| | | A. நிறுவனம் | | | |
| அபராதம் | இல்லை | இல்லை | | | |
| தண்டனை | இல்லை | | | | |
| மொத்தம் | இல்லை | | | | |
| | | B.இயக்குநர்கள் | | | |
| அபராதம் | இல்லை | இல்லை | | | |
| தண்டனை | இல்லை | | | | |
| மொத்தம் | இல்லை | | | | |
| | | C.கடமைசெய்யத்தவறிய அதிகாரிகள் | | | |
| அபராதம் | இல்லை | இல்லை | | | |
| தண்டனை | இல்லை | | | | |
| மொத்தம் | இல்லை | | | | |

பெறுநர்
பங்குதாரர்கள்
தமிழ்நாடு தொழில் வெடிமருந்து நிறுவனம்

**தணிக்கையாளர்களின் தணிச்சையான அறிக்கை:**

**தனியான நிறுவன விவர அறிக்கை மீதான தணிக்கையாளர்களின் அறிக்கை :**

விலக்கப்பட்ட கருத்து இத்துடன் இணைக்கப்பட்டுள்ள தமிழ்நாடு தொழில் வெடிமருந்து நிறுவனத்தின் மார்ச் **31. 2023** ஆம் நாளைய தனியான நிதிநிலை இருப்பு. நிலை குறிப்பையும் அந்நாளில் முடிவடையும் ஆண்டின் இலாப நட்டக் கணக்கையும் ரொக்க ஒட்ட பட்டியலையும் குறிப்பிடத்தக்க கணக்கியல் கொள்கைகள் மற்றும் விளக்க விவரங்களையும் நாங்கள் தணிக்கை செய்துள்ளோம்,

மேற்கூறியபடியும். எங்கள் கருத்துக்கும் எங்களுக்கும் கிடைக்கப் பெற்ற தகவல்கள். விளக்கங்கள் அடிப்படையிலும் கீழ் கூறப்பட்டுள்ள விளக்கப்பட்ட கருத்துக்களை அடிப்படை தவிர. தனியான நிதி நிலை அறிக்கைகள் நிறுவன சட்டம் **2013**ல் கேட்கப்பட்டுள்ள விவரங்களை கோரப்பட்டுள்ள முறையில் தருகின்றன, மற்றும் இந்தியாவில் பின்பற்றப்படும் பொதுவான கணக்கியல் கொள்கைகளுடன் ஒத்துள்ளன என்பதோடு மார்ச் **31, 2023**ம் தேதயில் இருப்பு நிலை மற்றும் நட்டக்கணக்கு சரியாகவும் நியாயமானதாகவும் காட்டுகின்றன.

**விளக்கப்பட்ட கருத்துக்கான அடிப்படை :**

நிறுவனச்சட்டம் **2013.** பரிவு **143 (10)**ல் குறிப்பிடப்பட்ட தணிக்கை தரத்திற்கு ஏற்ப நாங்கள் தணிக்கை செய்தோம், தணிக்கை தரத்தின் கீழ் எங்களுடைய பொறுப்புகள் நிதிநிலை அறிக்கையை தணிக்கை செய்யும் போது தணிக்கையாளரின் பொறுப்பு என்ற தலைப்பின் கீழ் விரிவாக கொடுக்கப்பட்டுள்ளது, இந்திய பட்டயக்கணக்காளர்கள் நிலையம் வெளியிட்டுள்ள ஒழுக்கவியல் விதிப்படி நிதிநிலை அறிக்கையின் தணிக்கையை பொறுப்பாக ஒழுக்கயியல் விதிகளின் முறைப்படி நிறைவேற்றியுள்ளோம், அத்துடன் போதுமான மற்றும் பொருத்தமான தணிக்கை ஆதாரங்களை நாங்கள் பெற்றுக்கொண்டவற்றை அடிப்படையாகக் கொண்டு விலக்கப்பட்ட கருத்துக்களை கொடுத்துள்ளோம் என நம்புகிறோம்,

a. குறிப்பு **3 :** இருப்பு நிலை குறிப்பின் தேதியில். நிதி நிலை அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள ஒதுக்கீடுகளும். மிகுதிகளும். குவிப்பு நட்டங்களும் நெட்வொர்த் முழுவதுமாக அரிக்கப்பட்டுள்ளது என சுட்டிக்காட்டுகிறது, நிறுவனம் பல ஆண்டுகளாக தொடர்ந்து நட்டத்தை சந்தித்து வருவதால். இருப்புநிலை குறிப்பு தேதியில். நடப்பு பொறுப்புகள். நடப்பு சொத்துகளுக்கு மேலாக உள்ளது, கீழே கொடுக்கப்பட்டுள்ள கணக்கியல் கொண்டுவரப்படாத புள்ளி விவரங்களை கணக்கில் எடுத்துக் கொண்டால் நிறுவனம் தொடர்ந்து இயங்கும் ஸ்தாபனமாக இருக்கக்கூடிய ஆற்றலுடையதாக இருக்குமா என்ற சந்தேகம் ஏற்பட கூடியதாக இருக்கிறது, மேலும் இந்த நிறுவனம் **2022-23** நிதியாண்டில் அதன் குறிப்பிடத்தக்க சொத்தை **2.21** கோடி விற்பனை செய்துள்ளது, நிறுவனம் அதன் வணிக நடவடிக்கைகளை மேற்கொள்ளவில்லை, மற்றும் அதன் செயல்பாடுகளையும் நிறுத்திவிட்டது, ஆனால் நிதிநிலை அறிக்கைகள் கணக்கியல் கொள்கை 1 (a) (ii) ல் குறிப்பிடப்பட்ட காரணங்களின் படி தொடர்ந்து இயங்கும் ஸ்தாபனம் என்ற அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ளது, இதன்பொருட்டு நிதிநிலை அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ள முறையில் எங்களது விலக்கப்பட்ட கருத்துக்களைத் தெரிவித்துள்ளோம்.

b. குறிப்பு : **29**ன் பிரிவு எண் **3** குறைந்த வட்டி கடன்கள் மற்றும் வழி வகை கடன்களுக்காக மாநில அரசுக்கு செலுத்த வேண்டிய இவ்வாண்டுக்கான வட்டி மற்றும் தண்ட வட்டி ரூ. **1047.74** இலட்சங்கள் மற்றும் **2022-23** ஆண்டு வரையிலான குவிப்பு வட்டி மற்றும் தண்ட வட்டி ரூ. **7650.55** இலட்சங்கள் வரையில் ஒதுக்கீடு செய்யப்படாததை குறிப்பிடுகின்றது, மேலும் மேற்கூறிய அறிக்கை ஆய்வு செய்கையில் ரூ. **120** இலட்சத்திற்கான அரசு கடனுக்கு ரூ. **671.43** இலட்சங்கள் வட்டி வழங்கப்படாதது. கணக்கு புத்தகத்தில் கிடைக்கப் பெறவில்லை. நிர்வாகத்தினால் இதற்கான காரணத்தினை எங்களின் திருப்திக்கு விளக்க இயலவில்லை.

c. கடன் கொடுத்தவர்களின் கணக்குகளை உறுதி செய்யும் போது சில கடன் கொடுத்தவர்கள் அவர்களுக்கு கொடுக்கப்படவேண்டிய கடனிற்கு வட்டி உரிமை கோரியுள்ளனர். அந்த உரிமையை நிறுவனம் ஒப்புகை செய்யவில்லை. எங்களால் அந்த வட்டி சட்டப்படி அல்லது ஒப்பந்தப்படிகொடுக்கப்பட, வேண்டியதா

என்று உறுதி செய்ய முடியவில்லை. எனவே, இக்கணக்கு வருடத்திற்கான நிறுவன இழப்பீடு, கடன் வழங்குநர்களின் வட்டி உரிமை தொகை குறைந்து கணக்கீடு செய்யப்பட்டுள்ளது.

d. குறிப்பு : 29ன் பிரிவு எண். 7ன் படி இந்நிறுவனம் 2 EHN தளவாடங்களுக்காக பெறதக்கவையான ரூ. 96.20 இலட்சங்கள் ஒதுக்கீடு செய்யப்படவில்லை. இது சம்பந்தமாக சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு பதிவு செய்யப்பட்டு தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது உயர்நீதிமன்றத்தின் ஆணையை எதிர்த்து உச்சநீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்யப்பட்டு நிலுவையில் உள்ளது.

e. 2023 ஆம் ஆண்டு மார்ச் 31 ஆம் தேதியில் விற்பனையில் இருந்து வரவேண்டியது ரூ. 1.60 கோடியாகும். ஆறு மாதங்களுக்கு மேலான நிலுவையில் உள்ள வரவிற்கான ஒதுக்கீடுகள், முந்தைய வருடத்திலோ அல்லது இந்த வருடத்திலோ ஒதுக்கீடு செய்யப்படாமலும், சரிசெய்யப்படாமலும் உள்ளது. வெகுகாலம் தாழ்ந்துள்ளதால் மேற்கூறிய கடன்களை வசூலிப்பது என்பது மிகவும் சந்தேகத்திற்குரியது. எனவே, வர்த்தக வரவுகளின் மீட்சியை கண்டறிவதில் உள்ள சிரமத்தை கருத்தில் கொண்டு கணக்குகள் அந்த அளவிற்கு உண்மையாகவும் நியாயமாகவும் இல்லை மற்றும் இதனால் இலாபத்தின் மீதான தாக்கம் எதும் இருந்தால் கண்டறிய இயலவில்லை. கடனாளிகளிடம் இருந்து அவர்கள் வைத்திருக்கும் பாக்கிகள் குறித்து எந்த உறுதிப்படுத்துதலும் பெறப்படவில்லை.

f. நிறுவனம் ரூ. 176.83 இலட்சத்திற்கு காலக்கடன்கள் மற்றும் முன் பணங்களைக் கொண்டுள்ளது. தொகையில் சந்தேகத்திற்குரிய முன்பணங்களுக்கு நிறுவனம் எந்தவித ஒதுக்கீடு செய்யவில்லை மற்றும் குறுகிய கால கடன்கள் மற்றும் முன்பணங்கள் திரும்பப்பெற கூடியவை என்றும் கூறுகிறது. அத்தகைய முன்பணங்கள் எவருக்கு வழங்கப்பட்டணவோ அவர்களிடமிருந்து உறுதிப்படுத்தல் கடிதம் இல்லாத நிலையில் போதுமான ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதா என்று கூறக்கூட முடியாத இயலாமையை வெளிப்படுத்துகிறோம். இதனால் இலாபத்தின்மீது ஏதேனும் தாக்கம் இருந்தால் அதை கண்டறிய முடியவில்லை.

g. 6 மாதங்களுக்கும் மேலாக செலுத்த வேண்டிய நிலுவைத் தொகையினை ஒவ்வொரு வர்த்தக நிலுவையாளரின் அடிப்படையில் பகுப்பாய்வு செய்து, தேவையெனில் வாரியத்தின் ஒப்புதலுடன் மீட்சி செய்யப்படவேண்டும். இதனால் இலாபத்தின்மீது ஏதும் தாக்கம் இருந்தால் அதை கண்டறிய முடியவில்லை.

h. ஆணை எண் 54/2012 நாள் 6.9.12 ன்படி கூடுதல் ஆணையர் மைய அரசு ஆயத்துறை அவர்களால் விதிக்கப்பட்ட சேவை வரி ரூ. 6,04,414/- கணக்கில் ஒதுக்கீடு செய்யப்படவில்லை. இதற்காக செலுத்தப்பட்ட ரூபாய் 3,00,000/- ஆயத்துறையின் பேரில் வரவு வைக்கப்பட்டுள்ளது, இந்த ஆணையின் மீது, நிறுவனம் தீர்ப்பாயத்தில் மேல்முறையீடு செய்துள்ளது. மேலும் அதற்கு இணையான அளவில் அபராதமும் விதிக்கப்பட்டுள்ளது.

i. வணிக வரி அலுவலர் குடியாத்தம் (கிழக்கு) கடந்த நடந்து முடிந்த பல முந்தைய ஆண்டுகளுக்கான மதிப்பீடு செய்யப்பட்ட வரியான ரூ. 11,61,32,216/- கோரியுள்ளது. அவற்றில் ரூ. 3,51,33,202/- மட்டுமே கணக்கில் எடுக்கப்பட்டுள்ளது மீதமுள்ளவை கணக்கிலும் எடுத்துக் கொள்ளப்படவில்லை. ஒதுக்கீடும் செய்யப்படவில்லை. வணிக வரித்துறை அலுவலர், குடியாத்தம் (கிழக்கு) இந்தியன் ஓவர்சீஸ் வங்கி, காந்திநகர் கிளையில் உள்ள வங்கி கணக்கை 2014-2015 ஆம் ஆண்டு முடக்கியுள்ளதாக கவனிக்கப்பட்டுள்ளது.

j. குறிப்பு எண் 28 : வரிசை எண் 1-3ன் படி பிடித்தம் செய்யும் அலுவலர் ஊழியர், சேம நல நிதி, வேலூர், சேமநல நிதியை தாமதமாக செலுத்தியதற்காக அபராத தொகை மற்றும் இழப்பீடு தொகையான ரூ. 8,29,70,007/- செலுத்தக் கோரி அறிவிப்பு செய்துள்ளது. நிறுவனம் தொழில் தீர்ப்பாயம் மற்றும் தொழிலாளர் நீதிமன்றத்தில் சேமநலநிதி அலுவலகம் வலுக்கட்டாய நடவடிக்கை எடுக்கும் முயற்சிக்கு தடை ஆணை பெற்றுள்ளது. நிறுவனம் இந்த தொகை கணக்கில் ஒதுக்கீடு செய்யவில்லை. இந்த தொகைகளின் அங்கீகரிக்கப்படாத பொறுப்புகளாக காட்டியுள்ளது.

k. 2001-02 மற்றும் 2002-03ம் ஆய்வு ஆண்டிற்கான வருமான வரி விதிப்புக்கான மேல் முறையிடு வழக்கு முடிந்து விட்டது, வருமான பிடித்தம் செய்யும் அதிகாரி கோரியுள்ள ரூ. 81.76 இலட்சங்களில் ரூ. 59.35 இலட்சங்கள் வசூலித்துள்ளார்கள். மீதமுள்ள பணத்தை நிறுவனத்திடம் இருந்து இன்னும் வசூல் செய்யவில்லை.

l. *சட்டப்படி முக்கியப் பொருட்கள் தயாரிப்பதற்கு தடை அல்லது சில வருடங்களாக உற்பத்தி இல்லாமை அல்லது குறிப்பிடத்தக்க வகையில் குறைவான உற்பத்தி என்பது சொத்துக்களின் மதிப்பீட்டில் இந்நிறுவனம் சொத்து இழப்பீடு கணக்கில் எடுத்துக் கொள்ளப்படவில்லை. அதே சமயம் சொத்துக்களின் விற்பனை விலை, அதன் உபயோக மதிப்பை விட அதிகமாக உள்ளது என உறுதிபடுத்துவதற்கான விவரங்கள் தரப்படவில்லை, நிறுவனத்தின் ஆதாயத்தின் மீதான இதன் விளைவுகள் பற்றி உறுதியாக தெரியாது.*

m. *நிறுவனம் தளவாடங்கள், இறக்குமதி திட்டத்தின் 5% சலுகை வரியின் கீழ் இயந்திரங்களை இறக்குமதி செய்வதற்கான 14.10.2004 தேதியிட்ட* EPCG *உரிமத்தைப் பெற்றுள்ளது. இதனால் சேமிக்கப்பட்ட வரி* US $ *88,667.88 ஆகும். உரிமத்தின்படி 8 ஆண்டுகளுக்குள், ஆண்டு சராசரி ஏற்றுமதியான ரூ. 70,73,119/-க்கு மேல் 8 மடங்கு ஏற்றுமதி செய்ய வேண்டியது கட்டாயமாகும். நிறுவனம் ஏற்றுமதி கடமையை முடித்துவிட்டாலும், நிறுவனம் தேவையான ரிட்டர்னை தாக்கல் செய்யாமல், கடமையை முடித்து விட்டது என்ற சான்று பெறவில்லை. எனவே, சென்னை சுங்கத்துறை உதவி ஆணையர், நிறுவனம் மீது ரூ. 37,88,693/- சுங்க வரியும், அதற்கான வட்டியும் மற்றும் ரூ. 2.85 இலட்சம் அபராதம் விதித்து உத்தரவிட்டார். நிறுவனம் ரூ. 2,84,148/- டெபாசிட் செலுத்திய பிறகு, 2022 ஆம் ஆண்டு ஜலை 15 ஆம் தேதி சென்னை மேல்முறையீட்டு ஆணையிடம் மேல்முறையீடு செய்துள்ளது.*

பொருளின் முக்கியத்துவம்

*கடந்த ஆண்டில் இந்தியன் ஓவர்சீஸ் வங்கிக்கு செலுத்த வேண்டிய பண வரவு / வங்கி* OD *ரூ. 61,013/- ஐ நிறுவனம் கணக்கிட்டுள்ளது. கணக்கு முடப்பட்டதால் அதற்கு எந்தப் பொறுப்பும் இல்லை இந்த வருடத்தில் வங்கி ரூ. 9,338/- தொகையை டெபிட் செய்திருந்தாலும் எந்தப் பொறுப்பும் இல்லாததால் அந்தத் தொகையை நிறுவனம் கணக்குகளில் எடுத்துக் கொள்ளவில்லை.*

**தனிநிதிநிலை அறிக்கைக்கு நிர்வாகத்தின் / மற்றும் கொடுக்கப்பட்டவர்களின் பொறுப்பு**

*பிரிவு 134(5) நிறுவன சட்டம் 2013 தயார் செய்வது மற்றும் வழங்குவது நிறுவனத்தின் இயக்குநர் குழுமத்தின் பொறுப்பாகும். சட்டப்பிரிவு 133ல் தெரிவிக்கப்பட்டுள்ள கணக்கு தரம் மற்றும் இந்தியாவில் பொதுவாக ஏற்றுக் கொள்ளக்கூடிய கணக்கு கொள்கைகள்படி அறிக்கைகள் தெளிவாகவும், உண்மையாகவும் பிழை இன்றியும் இருப்பது நிறுவனத்தின் இயக்குநர் குழுமத்தின் பொறுப்பு, நிறுவனத்தின் இயக்குநர் குழுமத்தின் பொறுப்புகள் பின்வருவனவற்றையும் உள்ளடக்கியவையாகும். விதிகளின்படி தேவையான கணக்கு பதிவேடுகள் பராமரிப்பது, நிறுவனத்தின் சொத்துக்களை பாதுகாப்பது, மோசடி மற்றும் இதர முறைகேடுகள் தவிர்ப்பதும், கண்டுபிடிப்பதும், தகுந்தகணக்கு கொள்கைகள் தேர்வுசெய்தல் மற்றும் வழிமுறைசெய்தல், விவேகமான, நியாயமான மதிப்பீடு மற்றும் முடிவெடுத்தல், முழுமையான மற்றும் பிழையின்றி திறம்பட செயல்படக் கூடிய போதுமான உள் நிதிக் கட்டுப்பாடு வடிவமைப்பு ஏற்படுத்துதல் மற்றும் அதனை செயல்படுத்துதல் முலம் உண்மையான, நேர்மையான மற்றும் மோசடி அல்லது தவறுகள் ஏற்படுத்தும் தவறான அறிக்கைகளை தவிர்த்து நிதிநிலை அறிக்கைகளை தயார் செய்வது மற்றும் வழங்குவதை உள்ளடக்கியதாகும்.*

*நிறுவனம் இயங்கும் ஸ்தாபனம் என்று முடிவு செய்வது இயக்குனர், அவையின் பொறுப்பாகும். நிறுவனம் தன்னுடைய உற்பத்தியை நிறுத்தி விட்டால் அல்லது நிறுவனத்தை கலைக்கும் நோக்கம் இருந்தால் அல்லது வேறு மாற்று வழி இல்லை என்ற நிலை ஏற்படாத போது இயங்கும் நிறுவனம் என்ற அடிப்படையில் நிதி நிலை அறிக்கையை தயாரிப்பது இயக்குனர் அவையின் பொறுப்பாகும்.*

*நிதி அறிக்கை சமர்பிக்கும் முறையை மேற்பார்வை செய்வது இயக்குநர் அவையின் பொறுப்பாகும்.*

**நிதி அறிக்கையை தணிக்கை செய்யும் தணிக்கையாளரின் பொறுப்பு :**

*நிதிநிலை அறிக்கை முழுவதுமாக மோசடி அல்லது பிழையில்லாமல் இருப்பதற்கான நியாயமான நம்பிக்கையை பெறுவதும். எங்கள் கருத்துக்கள் அடங்கிய தணிக்கை அறிக்கை அளிப்பதும் எங்கள் நோக்கமாகும், நியாயமான நம்பிக்கை என்பது மிகவும் உயர்மட்ட நம்பிக்கை. ஆனால் தணிக்கை தரத்தின்படி தணிக்கை செய்யப்பட்ட தணிக்கையில் முக்கியமான தவறான அறிக்கை இருந்தால் அதனை அறிவதற்கு உத்திரவாதம் இல்லை. தவறான அறிக்கை, மோசடி அல்லது பிழையால் ஏற்படலாம். இந்த அறிக்கையை உபயோகித்து பொருளாதார முடிவு எடுப்பவர்களுக்கு தனியாகவோ, அல்லது மொத்தமாகவோ மாற்றம் ஏற்பட்டால் அது முக்கியமான தவறான அறிக்கையாகும்.*

*தணிக்கை தரத்தின்படி தணிக்கையின் போது வல்லுநர் தீர்மானத்துடனும் வல்லுநர் ஐயுரவு கடைபிடிக்கப்பட்டது.*

*நாங்கள் மேலும்*

- *நாங்கள் கருத்து சொல்வதற்கு தேவையான சரியான, தேவையான, தணிக்கை ஆதாரங்களை பெற்றுள்ளோம். நிதிநிலை அறிக்கையில் மோசடி அல்லது பிழையால் தவறு இருப்பதை அடையாளம் கண்டுகொள்ள மற்றும் மதிப்பீடு செய்வதற்கு ஏற்ப தணிக்கை வழிமுறைகள் மற்றும் வடிவமைப்பும் செய்துள்ளோம் பிழையால் ஏற்படும் முக்கியமான, தவறான அறிக்கைகளை காட்டிலும் மோசடியால் ஏற்பட்ட முக்கியமான தவறான அறிக்கை அறிவது அதிகமான இன்னல் ஆகும். ஏனெனில் மோசடி கூட்டு சதி, பொய் ஆவணம் எண்ணத்துடன் விடுபடுதல், தவறான முறையிடுதல், உள்கட்டுப்பாட்டை மீறுதல் மூலமாக நடக்கலாம்.*

- *உள்கட்டுப்பாட்டை அறிந்து அதற்கு தேவையான தணிக்கை முறையை வடிவமைப்பது நிறுவனச்சட்டம் 143 (3) 1ன் படி, நிறுவனத்தில் நிதி உள்காட்டுப்பாடு போதுமான அளவில் ஏற்படுத்தப்பட்டுள்ளதா என்றும், அந்த கட்டுப்பாடு அனைத்து அம்சங்களிலும் திறம்பட இயங்குகிறதா என்று கருத்து கூறுவது எங்கள் பொறுப்பாகும்.*

- *நிறுவனம் பொருத்தமான கணக்கியல் கொள்கைகளை கொண்டுள்ளது என்பதனையும் பொருத்தமான கணக்கு மதிப்பீடு செய்துள்ளது என்பதனையும் நிறுவனத்துடன் தொடர்புடைய நபர்களுடன் ஆண வெளிப்பாடு ஆகியவற்றை மதிப்பீடு செய்தல்,*

- *நிறுவனம் தொடர்ந்து இயங்கும் ஸ்தாபனம் என்ற முறையில் கணக்கு பராமரிக்கப்படுவது பற்றி நிர்வாகம் எடுக்கும் முடிவு சரியானதா என்பதனை தணிக்கை ஆதாரங்களை கொண்டு நிறுவனம் தொடர்ந்து இயங்கும் ஸ்தாபனமாக இருக்கக்கூடிய ஆற்றல் உடையதாக இருக்குமா என்ற சந்தேகம் ஏற்படக்கூடியதா என முடிவு செய்வது நாங்கள் நிறுவனம் அத்தகைய நிலையற்ற தன்மையாக இருக்கிறது என்று முடிவெடுத்தால் நிதிநிலை அறிக்கையில் வெளிப்படுத்தும் பகுதியில் அதனை கவனத்திற்கு கொண்டுவர வேண்டும். அறிக்கையில் அத்தகைய வெளிப்பாடு போதுமானதாக இல்லையெனில் எங்கள் கருத்துக்களை மாற்றவேண்டும். நாங்கள் தணிக்கை அறிக்கை கொடுத்த நாள் வரையில் கிடைத்த தணிக்கை ஆதாரங்களை கொண்டு இந்த முடிவினை எடுத்தோம். என்றாலும் பிறகு நடக்கக்கூடிய நிகழ்களினால் நிறுவனம் தொடர்ந்து இயங்கும் ஸ்தாபனமாக இல்லாமல் இருக்க வாய்ப்புண்டு.*

- *நிதிநிலை அறிக்கையின் உள்ளடக்கம். வடிவமைப்பு மற்றும் முன்னிலைப்படுத்துதல், வெளிப்பாடுகள் அடிப்படை நடவடிக்கைகள் மற்றும் நிகழ்வுகளை நியாயமாக முன்னிலை படுத்துகின்றனவா என மதிப்பீடு செய்தல்.*

  *நாங்கள் தனிக்கையின் திட்டம், காலம் தனிக்கையில் கண்டறிந்தவைகள், தணிக்கையின் போது கண்டறிந்த குறிப்பிட தக்க உள்கட்டுப்பாடுகளின் குறைபாடுகள் ஆகியவற்றை நாங்கள் ஆளுமைசெய்யும் பொருப்பாளர்களுக்கு தெரிவித்துள்ளோம். மேலும் தன்னிச்சையான தணிக்கைக்கு தேவையான ஒழுக்கவியல் முறைகளை கடைபிடித்திருக்கிறோம் என்ற அறிக்கையை ஆளுமை செய்யும் பொறுப்பாளர்களிடம் கொடுத்துள்ளோம்.*

  *தன்னிச்சையான தணிக்கையை பாதிக்கக் கூடிய தொடர்புகளையும் மற்ற விஷயங்களையும் அதற்கு உன்டான பாதுகாப்புமுறைகள் ஆகியவற்றை தெரிவித்திருக்கிறோம்.*

## இதர சட்ட மற்றும் வரையறைக்கேற்ற அறிக்கை

1) *நிறுவனங்கள் (தணிக்கையர் அறிக்கை) ஆணை 2016 மத்திய அரசு அறிவிப்பு நிறுவனங்கள் சட்டம் 2013, பிரிவு (11) 143 ன் கீழ் கேட்டுள்ளபடி இவ்வாணைப் பகுதி 3ல் குறிப்பிட்டுள்ள விவரங்களை இணைப்பு 1ல் நாங்கள் கொடுத்துள்ளோம்.*

2) *சட்ட பிரிவு 143(3)ன் படி தேவைக்கேற்ப நாங்கள் அறிவிப்பதாவது*

   a) *எங்களின் தணிக்கைக்கு நம்பிக்கைக்கு உகந்த வகையில் தேவையான எல்லா விவரங்களையும் விளக்கங்களையும் நாங்கள் கேட்டு பெற்று இருக்கிறோம்.*

   b) *நாங்கள் பரிசோதித்த வரையில் எங்கள் கருத்துக்கு எட்டிய வரையில் சட்டப்படி நிறுவனம் வைத்திருக்க வேண்டிய முறையான கணக்கேடுகள் பராமரிக்கப்படுகின்றன.*

   c) *இவ்வறிக்கையில் குறிப்பிட்டுள்ள இருப்பு நிலை குறிப்பு இலாப நட்ட கணக்கு மற்றும் ரொக்க ஒட்டப்பட்டியலும் கணக்கு ஏடுகளுடன் இணங்க உள்ளன.*

   d) *எங்களுடைய கருத்துப்படி, மேல் குறிப்பிட்டுள்ள, தனியான நிதிநிலை அறிக்கைகள் சட்டப்பிரிவு 133 உடன் சேர்ந்து விதி 7ன் நிறுவனம் (கணக்கு) விதிகள் 2014 உடன் இணக்கமாக உள்ளன.*

   e) *31.03.2023 அன்று இயக்குநர்களிடமிருந்து பெறப்பட்ட முறையின் படியும் இயக்குநர்கள் பதிவு செய்தபடியும் எந்தவொரு இயக்குநரும் 31.3.2023 அன்று சட்டப்பிரிவு 164(2)படி இயக்குநராகவும் தகுதியின்மையாக உள்ளவராக இல்லை.*

   f) *நிதி அறிக்கையின் மேலான நிதி உள்கட்டுப்பாடு போதுமானதாக இருப்பது மற்றும் அதனின் செயல்பாட்டின் செயல்திறன்கள் பற்றிய அறிக்கையை அறிய இணைப்பு - II ல் பார்க்கவும்.*

   g) *நிறுவனம் (தணிக்கை மற்றும் தணிக்கையாளர்) விதி 2014 விதி எண் 11ன் படி தணிக்கையாளர்களின் அறிக்கையில் சேர்க்க வேண்டிய இதர விஷயங்கள் எங்களுக்கு பற்றி விவரங்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன.*

      i) *இந்நிறுவனத்திற்கு எதிராக 19 வழக்குகள் நிலுவையில் உள்ளன. நிதி அறிக்கையில் குறிப்பு எண் 28ல் ரூ. 981.59 இலட்சங்களுக்கான நிலுவையில் உள்ள வழக்குகள் பற்றி விவரங்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன.*

      ii) *நிறுவனம் நீண்ட கால ஒப்பந்தம் மற்றும் டெரிவேட்டில் ஒப்பந்தம் செய்து கொள்ளாததால் குறிப்பிட்ட அளவான முன் கானா நட்டம் ஏதுமில்லை.*

      iii) *நிறுவனத்தால் முதலீட்டார் கல்வி மற்றும் பாதுகாப்பு நிதிக்கு மாற்ற வேண்டிய தொகைகள் மாற்றுவதில் தாமதம் ஏதும் இல்லை.*

      iv) a) *நிர்வாகம் தங்களது தெரிந்த மற்றும் நம்பிக்கையின்படி நிறுவனம் எந்த ஒரு தொகையையும் கடனாக பெற்று அல்லது பங்கு ப்ரீமியம் முலமாகவோ அல்லது வேறு ஏதாவது வழியிலோ அல்லது பிறவகையான நிதி முலம் பெற்று கடனாகவோ அல்லது முன்பணமாகவோ அல்லது முதலீடாகவோ எந்த ஒருவருக்கோ அல்லது நிறுவனத்திற்கோ அயல் நாட்டு நிறுவனமும் சேர்ந்து (இடைத்தரகர்கள்) கொடுத்து அந்த இடைத்தரகர்களின் முலமாகவோ, எழுத்து பூர்வமாகவோ அல்லது வேறு வழியிலோ பதிவு செய்து அல்லது ஒரு புரிதலோடு, நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ, கடனாகவோ அல்லது முதலீடாக எந்த வகையிலாவது நிறுவனம் குறிப்பிட்ட மற்ற ஒருவருக்கோ அல்லது நிறுவனத்திற்கோ நிறுவனம் சார்பாக (இறுதி பயணாளிகள்) கொடுக்கப்படவில்லை என்றும், அல்லது உத்திரவாதமோ, பிணையாகவோ இறுதி பயணாளிகளுக்கு நிறுவனம் சார்பாக அளிக்கவில்லை என தெரிவித்துள்ளார்கள்.*

      b) *நிர்வாகம் தனது அறிந்த மற்றும் நம்பிக்கையின்படி வெளிநாட்டு நிறுவங்கள் உட்பட எந்த ஒரு நபரிடம் இருந்து அல்லது நிறுவனங்களிடமிருந்தும் எந்த நிதியும் நிறுவனத்தால் பெறப்படவிலலை என பிரிதிநிதித்துவபடுத்துகிறது.*

c) சூழ்நிலைகளில் நியாயமானதாகவும், பொருத்தமானதாகவும், கருதப்பட்ட தணிக்கையின் துணைப்பிரிவு (i) மற்றும் (ii) இன் கீழ் மேலே (a) மற்றும் ல் குறிப்பிட்ட விவரங்கள் பற்றிய பிரதிநிதித்துவங்கள். முக்கியமாக தவறான அறிக்கையை கொண்டுள்ளது என நம்புவதற்கான விவரங்கள் எதுவும் எங்கள் கவனத்திற்கு வரவில்லை.

iv) தணிக்கைக்கு உட்பட்ட இந்த ஆண்டில் நிறுவனம் எந்த ஈவுத் தொகையையும் அறிவிக்கவில்லை அல்லது செலுத்தவில்லை. எனவே நிறுவனம் பிரிவு 123, கம்பெனி சட்டம் 2013 இன்படி இணக்கமாக செயல்பட்டுள்ளது என்பது எழாது.

3) நிறுவனங்களின் (கணக்குகள்) விதிகள் 2014 இன் விதி 3(1) இன் படி கணக்கியலில் மென்பொருளைப் பயன்படுத்தி கணக்குகளைப் பராமரிப்பதற்கான தணிக்கை சோதனை (பதிவு திருத்தம்) வசதி, ஏப்ரல் 1, 2023 முதல் இந்த நிறுவனத்திற்கு பொருந்தும். அதன்படி நிறுவனங்கள் (தணிக்கை மற்றும் தணிக்கயைாளர்கள் / விதிகள் 2014 ன் விதி 11(8) இன் கீழ் அறிக்கை செய்வது 31.03.2023 ஆம் நிதியாண்டிற்கு பொருந்தாது.

4) கம்பெனி சட்டம் பிரிவு 143-(5)ன் கீழ் இந்திய கட்டுப்பாட்டாளர் மற்றும் தலைமைத் தணிக்கையரின் கட்டளைப்படி நாங்கள் அளிக்கும் அறிக்கை.

a) இந்த நிறுவனத்தின் தீர்வை விலக்கப்பட்ட நிலத்திற்கான பத்திரங்கள் சரியாக உள்ளன. இந்நிறுவனத்திற்கு குத்தகையில் எடுக்கப்பட்ட நிலம் ஏதுமில்லை.

b) எங்களுக்கு வழங்கப்பட்ட தகவல் மற்றும் விளக்கங்களின்படி நிறுவனத்திற்கு வரவேண்டிய ரூ.84.61 இலட்சங்கள் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளன. இதைத் தவிர வேறு கடன்கள் / வட்டிகள் தள்ளுபடி செய்யப்படவில்லை.

c) முன்றாவது தரப்பினரிடம் உள்ள நிறுவனத்தின் சரக்குகள் மற்றும் அரசு அல்லது பிற அதிகாரிகளிடம் இருந்து பெற்ற பரிசுகள் மானியங்களாக பெறப்பட்ட சொத்துக்களுக்கு முறையான பதிவுகள் பராமரிக்கப்படுகின்றன.

**எஸ். உதயகுமார் & அசோசியேட்ஸ்**
பட்டய கணக்காளர்களுக்காக
பதிவு எண் 006639S

இடம் : சென்னை
நாள் : 01.09.2023

S. **உதயகுமார் பங்குதாரர்**, பதிவு எண் 201004
UDIN 23201004BGTHAY4500

**தணிக்கையாளரின் அறிக்கை இணைப்பு - I**

*தணிக்கையாளரின் அறிக்கைக்கான இணைப்பு பத்தி 9ல் குறிப்பிட்டுள்ள பிற சட்ட மற்றும் ஒழுங்கு முறை பற்றிய அறிக்கை என்ற தலைப்பின் கீழ் எங்கள் சம தேதி அறிக்கை.*

i) *சொத்து, இயந்திரம் மற்றும் தளவாடங்கள் குறித்து*

a) *சொத்து, இயந்திரம் மற்றும் தளவாடங்களின் இருப்பிடத்தையும், எண்ணிக்கையும் முழுவதுமாக காண்பிக்கும், தகவல்களுக்கான சரியான பதிவேடுகள் நிறுவனம் பராமரித்துள்ளது. நிறுவனத்திற்கு தொட்டுனரமுடியாத சொத்துக்கள் ஏதும் இல்லாததால் பத்தி 3, பிரிவு* (I) (a)(b)*ன் ஆணை பொருந்தாது.*

b) *இந்த வருடத்தின்போது சொத்து, இயந்திரம் மற்றும் தளவாடங்கள் சரியான இடைவெளியில் நிர்வாகத்தால் சரிபார்க்கப்பட்டு இருக்கிறது. எங்களுக்கு தரப்பட்ட தகவல் மற்றும் விளக்கங்களின்படி சரிபார்த்தலின்போது கருத்தில் எடுத்துக்கொள்ளும்படியான வேறுபாடுகள் கவனிக்கப்படவில்லை.*

c) *எங்களுக்கு வழங்கப்பட்ட தகவல்கள், விளக்கங்கள் மற்றும் நாங்கள் ஆய்வு செய்த பதிவுகளின் அடிப்படையில். இருப்பு நிலை அறிக்கை தேதியில். அனைத்து அசையாச் சொத்துக்களான, நிலம் மற்றும் கட்டிடங்களின் உரிமை பத்திரங்கள், நிறுவனத்தின் பெயரில் இருக்கின்றன என தெரிவிக்கிறோம்.*

d) *எங்களுக்கு வழங்கப்பட்ட தகவல் மற்றும் விளக்கங்களின்படி, நிறுவனம், சொத்து இயந்திரம் மற்றும் தளவாடங்களை இந்த வருடத்தில் மறு மதிப்பீடு செய்யவில்லை. எனவே, ஆணையின் பத்தி 3ன் பிரிவு (1) (டி) பொருந்தாது.*

e) *எங்களுக்கு வழங்கப்பட்ட தகவல் மற்றும் விளக்கங்களின்படி, பினாமி பரிவர்த்தனைகள் (தடை) சட்டம் 1988ன் கீழ் எந்த நடவடிக்கையும் இல்லை. எனவே, ஆணையின் பத்தி 3இன் பிரிவு 1(இ) பொருந்தாது.*

ii) *பண்டக பொருட்கள் குறித்து*

a) *எங்களுக்கு விளக்கியபடி இந்த வருடம் பண்டக பொருட்கள் நிர்வாகத்தால் சரியாக்கப்பட்டது. எங்கள் கருத்துப்படி சரிபார்ப்பின் அதிர்வெண் நியாயமானது. சரிபார்ப்பின்போது, ஒவ்வொரு வகுப்பிலும், முரண்பாடு 10 சதவிதத்திற்கு மேல் இல்லை என கவனிக்கப்பட்டது. அந்த முரண்பாடுகள் கணக்கு புத்தங்களில் சரியாக கையாளப்பட்டுள்ளன.*

b) *வங்கிகள் அல்லது நிதி நிறுவனங்களிடம் இருந்து மொத்தமாக ரு 5 கோடிக்கும் அதிகமான நடைமுறை கடன் வரம்புகள் அளிக்கப்படவில்லை. எனவே, ஆணையின் பத்தி 3 இன் பிரிவு* (ii)(b) *பொருந்தாது.*

iii) *சட்டத்தின் பிரிவு 189 இன் கீழ் பராமரிக்கப்படும் பதிவேட்டில் உள்ள நிறுவனங்கள், அல்லது பிற தரப்பினருக்கு நிறுவனம் எந்த முதலீடும் செய்யவில்லை. எந்தவித உத்திரவதத்தையும் அல்லது பாதுகாப்பையும் அல்லது கடன்களை வழங்கவில்லை. இதன் விளைவாக ஆணையின் பத்தி 3 உட்பிரிவு* (ii) (a) *முதல்* (f) *வரை பொருந்தாது.*

iv) *எங்கள் கருத்து மற்றும் எங்களுக்கு வழங்கப்பட்ட தகவல்கள் மற்றும் விளக்கங்களின்படி, நிறுவனங்கள் சட்டம் 2013 இன் பிரிவு 185 அல்லது பிரிவு 186ல் குறிப்பிடப்பட்டுள்ள இயக்குநர்கள் அல்லது நபர்களுக்கு நிறுவனம் எந்த கடனும், அல்லது முதலீடுகள், உத்திரவாதங்கள் மற்றும் பாதுகாப்பை வழங்கவில்லை. எனவே, ஆணையின் பத்தி 3* (iv) *இன் தேவைகள் பொருந்தாது.*

v) *நிறுவனம் பொது மக்களிடம் இருந்து எந்தவொரு வைப்பு தொகையையும் ஏற்கவில்லை அதன் விளைவாக இந்திய ரிசர்வ் வங்கி வழங்கி உத்திரவுகள் மற்றும் பிரிவுகள் 73 முதல் 76 வரையிலான விதிகள் அல்லது சட்டத்தின் பிற தொடர்புடைய விதிகள் மற்றும் அதன் கீழ் உருவாக்கப்பட்ட விதிகள் பொருந்தாது. எங்களுக்கு வழங்கப்பட்ட தகவல்களின்படி பிரிவு 73 முதல் 76 வரையிலான விதிகளுக்கு இணங்காததற்காக*

கம்பெனி சட்ட வாரியம் அல்லது தேசிய நிறுவன சட்ட தீர்ப்பாயம் அல்லது இந்திய ரிசர்வ் வங்கி அல்லது எந்த நீதிமன்றமும் அல்லது பிற தீர்ப்பாயமும் நிறுவனத்திற்கு எந்த உத்திரவும் பிறப்பிக்கப்படவில்லை.

vi) எமக்கு வழங்கப்பட்ட தகவல்கள் மற்றும் விளக்கங்களின்படி, மற்றும் நிறுவன சட்டத்தின் தொடர்புடைய விதிகளின்படி, தணிக்கைக்கு உட்பட்ட ஆண்டடிற்கான செலவு பதிவேடுகளைப் பராமரிப்பது நிறுவனத்திற்கு பொருந்தாது என்று நாங்கள் கருதுகிறோம். எனவே ஆணையின் பத்தி 3 (vi) பொருந்தாது.

vii) a) எங்களுக்கு கொடுத்த தகவல் மற்றும் விளக்கங்களின்படி இந்த நிறுவனம் சர்ச்சையில் இல்லாத சட்டப்படியான பாக்கிகளை பொதுவாக அலுவலர்களிடம் சரியாக டெபாசிட் செய்யவில்லை என்பது எங்கள் கருத்தாகும். இவற்றில் சர்ச்சை இல்லாத சேவை வரி, வருமான வரி, சுங்கவரி, கலால் வரி, விற்பனை வரி, சொத்து வரி, மதிப்பு கூட்டு வரி, தொழிலாளர் சேமநல நிதி மற்றும் தொழிலாளர் நல காப்பீடு அடங்கும், 31.03.2023 தேதயில், 6 மாதத்திற்கு மேலாக, சட்டப்படியான பாக்கிகள் கீழே அறிவிக்கப்பட்டுள்ளது.

1) மதிப்பீடு செய்யப்பட்டு, செலுத்தக்கூடிய மதிப்பூட்டு கூட்டு வரி மற்றும் மத்திய அரசு விற்பனை வரி ரூ. 11,61,32,216/-

2) தொழில்வரி ரூ. 53,82,918/-

3) வருமானவரி ரூ. 22,41,000/-

b) சர்ச்சைக்கு உள்ளான உரிய வருமான வரி, விற்பனை வரி, சேவை வரி, கலால் மற்றும் மதிப்பிக்கூட்டு வரி செலுத்தப்படாதவை பின் வருமாறு.

| சட்டம் | கடன் பொருப்பகளின் தன்மை | சர்ச்சைக்கு உள்ளான வருடம் | நிலுவையில் உள்ள தொகை | சர்ச்சை நிலுவை உள்ள தீர்ப்பாயம் |
|---|---|---|---|---|
| நிதிச்சட்டம் 1994 ன் கீழ்வரும் சேவைவரி | அயல்நாட்டில் செலுத்திய தரகிற்கான சேவைவரி | 18.04.2006 முதல் 31.03.2009 வரை | 6,04,414 | CESTAT, பங்களூரு |

viii) எங்களின் கருத்து மற்றும் எங்களுக்கு அளிக்கப்பட்ட தகவல் மற்றும் விளக்கங்களின்படி வருமானவரி சட்டம் 1961 இன் கீழ் இந்த வருட மதிப்பீடுகளில் வருமானமாக பதிவு செய்யப்படாத பரிவர்த்தனைகள் வெளிப்படுத்தப்பட்டவை அல்லது சரணடைந்தவை ஏதும் இல்லை.

ix) எங்களின் கருத்து மற்றும் எங்களுக்கு அளிக்கப்பட்ட தகவல்கள் மற்றும் விளக்கங்களின்படி நிறுவனம் தமிழ்நாடு அரசிற்கு நிலுவைத் தேதி முடிந்த ரூ. 23,301.77 இலட்சங்கள் கடன்கள் உள்ளன. அதன் விவரம் பின் வருமாறு

| கடன் பத்திரங்கள் மற்றும் கடன் தன்மை | கடன் கொடுத்தவரின் பெயர் | உரிய தேதியில் செலுத்தப்படாத தொகை ரூ. லட்சங்களில் | முதல் அல்லது வட்டி | தாமதமான நாட்களின் எண்ணிக்கை | கருத்துக்கள் ஏதேனும் இருந்தால் |
|---|---|---|---|---|---|
| கால கடன் | தமிழ்நாடு அரசு | 4562.22 | முதல் | 10585 | பாதுகாப்பற்ற |
| வழிவகை கடன் | தமிழ்நாடு அரசு | 800.00 | முதல் | 5475 | பாதுகாப்பற்ற |
| வழிவகை கடன் | தமிழ்நாடு அரசு | 19.00 | முதல் | 3650 | பாதுகாப்பற்ற |
| வழிவகை கடன் | தமிழ்நாடு அரசு | 500.00 | முதல் | 2555 | பாதுகாப்பற்ற |
| வழிவகை கடன் | தமிழ்நாடு அரசு | 212.00 | முதல் | 2190 | பாதுகாப்பற்ற |
| வழிவகை கடன் | தமிழ்நாடு அரசு | 500.00 | முதல் | 2190 | பாதுகாப்பற்ற |
| வழிவகை கடன் | தமிழ்நாடு அரசு | 4715.00 | முதல் | 1825 | பாதுகாப்பற்ற |
| வழிவகை கடன் | தமிழ்நாடு அரசு | 61.20 | முதல் | 1825 | பாதுகாப்பற்ற |
| விருப்ப ஓய்வு திட்ட கடன் | தமிழ்நாடு அரசு | 650.00 | முதல் | 4745 | பாதுகாப்பற்ற |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| விருப்ப ஓய்வு திட்ட கடன் | தமிழ்நாடு அரசு | 1305.93 | முதல் | 4380 | பாதுகாப்பற்ற |
| குறுகிய கால கடன் | தமிழ்நாடு அரசு | 21.39 | முதல் | 5475 | பாதுகாப்பற்ற |
| குறுகிய கால கடன் | தமிழ்நாடு அரசு | 93.00 | முதல் | 2920 | பாதுகாப்பற்ற |
| விருப்ப ஓய்வு திட்ட கடனுக்கான வட்டி | தமிழ்நாடு அரசு | 2373.17 | வட்டி | 5475 | பாதுகாப்பற்ற |
| விருப்ப ஓய்வு திட்ட கடனுக்கான வட்டி | தமிழ்நாடு அரசு | 7158.75 | வட்டி | 5475 | பாதுகாப்பற்ற |
| குறுகிய கால கடனுக்கான வட்டி | தமிழ்நாடு அரசு | 239.91 | வட்டி | 5475 | பாதுகாப்பற்ற |

b) எந்த ஒரு வங்கியோ அல்லது நிதி நிறுவனமோ அல்லது எந்த ஒரு கடன் வழங்குநரோ, நிறுவனம் வேண்டும் என்றே கடனைத் திருப்பிச் செலுத்தாததாக அறிவிக்கவில்லை.

c) 2022-23 ஆம் ஆண்டில் நிறுவனம் நீண்ட கால கடன்கள் ஏதும் பெறவில்லை. எனவே அதன் பயன்பாடு பற்றி தெரிவிக்க எழவில்லை.

d) குறுகிய கால அடிப்படையில் திரட்டப்பட்ட நிதிகள் ஏதும் நீண்டகால நோக்கங்களுக்காக பயன்படுத்தப்படவில்லை.

e) நிறுவனம் அதன் துணை நிறுவனங்கள், கூட்டாளிகள் அல்லது கூட்டு முயற்சிகள் ஆகியவற்றிற்காக அல்லது அத்தகைய விற்பனை கடமைகளை நிறைவேற்றுவதற்காக, எந்த ஒரு நிறுவனத்திடமிருந்தே அல்லது நபரிடமிருந்தோ எந்த நிதியையும் பெறவில்லை.

f) நிறுவனம், அதன் துணை நிறுவனங்கள், அசோசியேட்ஸ் அல்லது கூட்டு முயற்சிகளில் வைத்திருக்கும் பத்திரங்கள் உறுதிமொழியின் பேரில் இந்த ஆண்டில் எந்த கடனையும் திரட்டவில்லை.

x) எங்களுக்கு வழங்கப்பட்ட தகவல் மற்றும் விளக்கங்களின்படி நிறுவனம் தணிக்கைக்கு உட்பட்ட ஆண்டில் முதல் பொது பங்கு வெளியீடு முலமாகவோ அல்லது மேலும் பொது பங்கு வெளியீடு முலம் எந்த பணத்தையும் திரட்டவில்லை. மேலும் நிறுவனம் எந்த ஒரு முன்னுரிமை ஒதுக்கீட்டையோ அல்லது தனிப்பட்ட முறையில் பங்குகளையோ அல்லது மாற்றத்தக்க கடனீட்டு பத்திரங்களையோ இந்த ஆண்டில் ஒதுக்கீடு செய்யவில்லை. எனவே ஆணையின் பத்தி 3 (x) பொருந்தாது.

xi) இந்தியாவில் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட தணிக்கை நடைமுறைகளின்படி மேற்கொள்ளப்பட்ட நிறுவனத்தின் புத்தகங்கள் மற்றும் பதிவேடு ஆய்வுகளின்போது எங்களுக்கு வழங்கப்பட்ட தகவல்கள் மற்றும் விளக்கங்களின்படி, நிறுவனத்தால் அல்லது நிறுவனத்தில் செய்யப்பட்ட மோசடியை இந்த ஆண்டில் நாங்கள் காணவில்லை. அல்லது நிர்வாகத்தால் அத்தகைய சம்பவம் குறித்து எங்களுக்கு தெரிவிக்கப்படவில்லை. நிறுவனங்கள் சட்டம் 2013 பிரிவு 143(2) இன் கீழ் எந்த அறிக்கையும் தாக்கல் செய்யப்படவில்லை. எனவே ஆணையின் பத்தி 3 (xi)(b) மற்றும் 3 (xi)(c) ஆகியவற்றின் அறிக்கை தேவைகள் பொருந்தாது. இந்த ஆண்டு மற்றும் தணிக்கை அறிக்கையின் தேதி வரை எந்த ஒரு விசில் புரோவர் புகாரும் நிறுவனத்தால் பெறப்படவில்லை என்று நிறுவனம் தெரிவித்துள்ளது.

xii) நிறுவனம் ஒரு நிதி நிறுவனம் அல்ல, எனவே ஆணையின் 3 (xii) பத்தியின் கீழ் அறிக்கை தருவது பொருந்தாது.

xiii) எங்களுக்கு வழங்கப்பட்ட தகவல்கள் மற்றும் விளக்கங்களின்படி, தொடர்புடைய தரப்பினருடனான அனைத்து பரிவர்த்தனைகளும் நிறுவனங்கள் சட்டம் 2013ன் பிரிவுகள் 177 மற்றும் பிரிவு 188 க்கு இணங்குவதாக இருக்கிறது மற்றும் அந்த பரிவர்த்தனைகளின் அனைத்து விவரங்களும் நிதி நிலை அறிக்கைகளில், பொருந்தக்கூடிய கணக்கியல் தர நிலைக்கு ஏற்றவாறு வெளியிடப்பட்டுள்ளன.

xiv) நிறுவனங்கள் சட்டம் 2013 இன் பிரிவு 138 ன்படி நிறுவனங்கள் (கணக்குகள்) விதிகள் 2014 இன் விதி 13 இன்படி உள்தணிக்கை செயல்பாட்டிற்கு நிறுவனம் ஒரு உள் தணிக்கையாளரை நியமிக்க வேண்டிய அவசியமில்லை. எனவே, ஆணையின் பத்தி 3 (xiv) இன் கீழ் அறிக்கையிடுவது பொருந்தாது.

xv) எங்களுக்கு வழங்கப்பட்ட தகவல் மற்றும் விளக்கங்களின்படி மற்றும் நிறுவனம் இயக்குநர்கள் அல்லது

அத்தகைய இயக்குநர்களுடன் தொடர்புடைய நபர்களுடன் பணமில்லா பரிவர்த்தனைகளில் ஈடுபடவில்லை. எனவே ஆணையின் பத்தி 3 (xv) பொருந்தாது.

xvi) எங்களுக்கு வழங்கப்பட்ட தகவல் மற்றும் விளக்கங்களின்படி மற்றும் நிறுவத்தின் பதிவுகளை ஆய்வு செய்ததின் அடிப்படையில், நிறுவனம், இந்திய ரிசர்வ் வங்கி சட்டம் 1934 இன் பிரிவு 45 A இன் கீழ் பதிவு செய்ய வேண்டிய அவசியமில்லை. மேலும், ஆணையின் பத்தி 3 (xvi) இன் உட் பிரிவு இல் கொடுக்கப்பட்ட, பிற தேவையான அறிக்கைகள் பொருந்தாது.

xvii) தணிக்கை உரிய இந்த வருடத்தில் நிறுவனம் பண இழப்பை சந்தித்துள்ளது.

xviii) எமக்கு வழங்கப்பட்ட தகவல்கள் மற்றும் விளக்கங்களின்படி இந்த வருடத்தில் சட்டபூர்வ கணக்காய்வாளர் எவரும் ராஜினாமா செய்யவில்லை, எனவே ஆணையின் பத்தி 3 (xviii) பொருந்தாது.

xix) எங்களுக்கு வழங்கப்பட்ட தகவல்கள் மற்றும் விளக்கங்களின்படி, தணிக்கை அறிக்கையின் தேதியில், இருப்பு நிலை தேதியிலிருந்து ஒரு வருடத்திற்குள், இருப்பு நிலைத் தேதியில் இருக்கும் அதன் கடன் பொறுப்புகளை செலுத்த வேண்டியபோது நிறுவனம் பூர்த்தி செய்ய இயலாது என்ற நிச்சயமற்ற தன்மை உள்ளது.

xx) நிறுவனங்கள் சட்டம் 2013 ன் பிரிவி 135 இன் விதிகள், நிறுவனத்திற்கு உட்பட்ட நிதியாண்டிற்கு பொருந்தாது. எனவே, ஆணையின் பத்தி 3 (xx) இன் படி கொடுக்கப்பட வேண்டிய அறிக்கை பொருந்தாது.

xxi) நிறுவனம் அதன் கணக்குகளை மற்ற நிறுவனங்களுடன் ஒருங்கிணைக்கத் தேவையில்லை. எனவே, ஆணையின் பத்தி 3 (xxi) இன் தேவைகள் பொருந்தாது.

**எஸ். உதயகுமார் & அசோசியேட்ஸ்**
பட்டய கணக்காளர்களுக்காக
பதிவு எண் 006639S

இடம் : சென்னை
நாள் : 01.09.2023

S. **உதயகுமார் பங்குதாரர்**, பதிவு எண் 201004
UDIN 23201004BGTHAY4500

**தணிக்கையாளரின் அறிக்கை இணைப்பு - II**

*தணிக்கையாளரின் அறிக்கை பத்தி 2 (h) குறிப்பிட்டுள்ள இதர சட்ட மற்றும் வரையறைக்கேற்ற அறிக்கையில் கூறப்பட்டுள்ள இணைப்பு அறிக்கை*

**பிரிவு 143 (3)(I) நிறுவன சட்டம் 2013ன் படி நிதி அறிக்கையின் மேலான நிதி உள்கட்டுபாடு அறிக்கையின் அறிக்கை**

*தமிழ்நாடு தொழில் வெடிமருந்து நிறுவனத்தின் 31,03,2023 அன்றைய நிதி அறிக்கையின் மேலான நிதி உள்கட்டுப்பாட்டின் அறிக்கையை, நாங்கள் அன்றைய தேதியிலான, எங்களுடைய நிதிநிலை குறிப்பை தணிக்கை செய்ததுடன், இணைத்து தணிக்கை செய்துள்ளோம்.*

**நிதி உள்கட்டுப்பாடு நிர்வாகத்தின் பொறுப்பு**

*நிதி உள் கட்டுபாடு செயல்பாட்டின் வடிவமைப்பு ஏற்படுத்துதல், மற்றும் அதனை பராமரித்தல் நிர்வாகத்தின் பொறுப்பாகும். நிதி அறிக்கை மேலான அந்த நிதி உள்கட்டுபாட்டின் வடிவமைப்பு, இந்திய பட்டய கணக்காளர் நிலையத்தினால் வெளியிடப்பட்டுள்ள நிதி உள்கட்டுப்பாட்டின் மேலான நிதி அறிக்கையின் தணிக்கைக்கான வழிகாட்டு குறிப்பில் கூறப்பட்டுள்ள முக்கியமான கூறுகளை அடிப்படையாக கொண்டு இருக்க வேண்டும். இது பற்றிய நிர்வாகத்தின் பொறுப்பானது நிதி உள் கட்டுபாடு செயல்பாட்டினை வடிவமைத்தல், செயல்படுத்துதல் மற்றும் பராமரித்தல், நிதி உள் கட்டுப்பாட்டினை செம்மையாக நிர்வகித்து, வியாபாரத்தை ஒழுங்காகவும், திறமையாகவும் நடத்துவது, நிறுவனத்தின் கொள்கைகளை பின்பற்றுதல், நிறுவனத்தின் சொத்துக்களை பாதுகாப்பது, மோசடி முறைகேடுகள் மற்றும் தவறுகளை தவிர்ப்பது, கணக்குகளை முழுவதுமாகவம், துல்லியமாகவும் பராமரிப்பது, நிறுவன சட்டம் 2013ன் படி சரியான நேரத்தில் நம்ப தகுந்த நிதி விவரங்களை தயார் செய்வது போன்றவற்றை உள்ளடக்கியதாகும்.*

**தணிக்கையாளரின் பொறுப்பு**

*நிறுவனத்தின் நிதி அறிக்கை மேலான நிதி உள்கட்டுப்பாட்டினை, தணிக்கை செய்ததின் அடிப்படையில் கருத்து தெரிவிப்பது எங்களது பொறுப்பாகும்.*

*பிரிவு 143(10) நிறுவனச் சட்டம் 2013ல் குறிப்பிட்டுள்ள தணிக்கை, தரத்திற்கு ஏற்ப, மற்றும் இந்திய பட்டய கணக்காளர் நிலையத்தினால் வெளியிடப்பட்டுள்ள, நிதி அறிக்கையின் மேலான நிதி உட்கட்டுபாடு தணிக்கைக்கான வழிகாட்டு குறிப்பீட்டில் உள்ளவற்றில், பொருந்துகின்ற அளவிற்கு, நாங்கள் தணிக்கை செய்துள்ளோம். நிதி அறிக்கையின் மேலான நிதி உட்கட்டுப்பாடு, போதுமான அளவில் ஏற்படுத்தப்பட்டுள்ளதா என்றும், சரியாக பராமரிக்கப்படுகிறதா என்றும், அந்த கட்டுப்பாடு அனைத்து அம்சங்களிலும் திறம்பட இயங்குகிறதா என்பதை பற்றியும். நியாயமான உத்திரவாதம் பெற, நெறிமுறை தேவைக்கு இணங்க திட்டமிட்டு நாங்கள் தணிக்கை செய்ய வேண்டும் என்பது அந்த தரம் மற்றும் வழிகாட்டு குறிப்பின் தேவையாகும். நிதி அறிக்கையின் மேலான, நிதி உள்கட்டுப்பாடு போதுமானதாகவும் மற்றும் திறம்பட இயங்குகிறது என்பதற்கான தணிக்கை ஆதாரங்களை பெறுவதற்காக, மேற்கொள்ளும் செயல்முறைகளை எங்கள் தணிக்கை கொண்டுள்ளது.*

*நிதி அறிக்கையின் மேலான நிதி உள்கட்டுப்பாட்டின் தணிக்கையானது நிதி அறிக்கையின் மேலான நிதி உள் கட்டுப்பாடுகளை புரிந்து கொள்ளுதல், நிதி உள்கட்டுப்பாட்டில் உள்ள பலவீனமான அம்சங்கள் பற்றிய ஆபத்துக்களை மதிப்பீடு செய்வது, நிதி உட்கட்டுபாட்டின் வடிவமைப்பை சோதனை செய்தல், மதிப்பீடு செய்யப்பட்ட ஆபத்துகளின் அடிப்படையில் நிதி உள் கட்டுப்பாட்டின் செயல் நிறுவன மதிப்பீடு செய்தல் ஆகும். மேலும், தணிக்கைக்கான செயல்முறைகளை தேர்ந்தெடுப்பது நிதி அறிக்கையில் உள்ள மோசடி அல்லது தவறால் ஏற்படும் தவறான அறிக்கையை ஆய்ந்து மதிப்பீடு செய்வதும், தணிக்கையாளர்களின் தீர்மானத்தை பொருத்தது.*

*நிறுவனத்தின் நிதி அறிக்கை மேலான நிதி உள்கட்டுப்பாடு அமைப்பு பற்றிய தணிக்கை கருத்திற்கு நாங்கள் பெற்ற ஆதாரங்கள், போதுமானதாகவும், அடிப்படை ஆதாரமாகவும் இருந்தது என நம்புகிறோம்.*

**நிதி அறிக்கையின் மேலான நிதி உள்கட்டுப்பாட்டின் பொருள்**

*ஒரு நிறுவனத்தின் நிதி அறிக்கையின் மேலான நிதி உட்கட்டுப்பாடு என்பது, வெளி உலகத்திற்கு தேவையான*

*பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கியல் கோட்பாடுகளின் படி தயாரிக்கப்படும் நம்பகத் தன்மையுடன் ஆன, நிதி அறிக்கையை, நியாயமான உத்திரவாதத்துடன் வழங்கக்கூடிய செயல்முறை வடிவமைப்பாகும்.*

*ஒரு நிறுவனத்தின் நிதி அறிக்கையின் நிதி உட்கட்டுப்பாடு என்பது பின்வரும் கொள்கைகளையும், செயல் முறைகளையும் உள்ளடக்கியது.*

*1) நிறுவனங்களின் பரிவர்த்தனையையும் பதிவு செய்துள்ள விவரங்களை நியாயமாகவும், துல்லியமாகவும் பராமரித்தல்.*

*2) பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கியல் கோட்பாடுகளின்படி நிதி அறிக்கை தயார் செய்வதற்கு தேவையான பரிவர்த்தனைகளை பதிவு செய்யப்படுகிறது மற்றும் நிர்வாக மற்றும் நிறுவனத்தின் இயக்குநர்கள் அனுமதி பெற்று வரவு செலவு செய்யப்படுகிறது என்று நியாயமான உத்திரவாதம் வழங்குவது.*

*3) நிறுவனத்திற்காக, அங்கீகாரமில்லாமல் சொத்துகளை கையகப்படுத்துதல் அல்லது விற்பனை செய்வது அல்லது உபயோகித்தல். நிதி அறிக்கையில் ஏற்படக்கூடிய முக்கியமான விளைவுகளை தடுப்பது அல்லது சரியான நேரத்தில் கண்டறிதல் பற்றி நியாயமான உத்திரவாதம் வழங்குவது.*

**நிதி அறிக்கையின் மேலான நிதி உள்கட்டுப்பாட்டின் உள்ளார்ந்த குறைகள்**

*நிதி அறிக்கையின் மேலான நிதி உட்கட்டுப்பாட்டில் உள்ள உள்ளார்ந்த குறைகளால், தவறுதலாகவோ அல்லது மோசடியாகவோ ஏற்படக்கூடிய முக்கியமான தவறான அறிக்கைகள் கண்டறியாமல் போகலாம். கூட்டாக சேர்ந்து செயல்படுவதால் அல்லது முறையற்ற மேலாண்மை மற்றும் கட்டுபாடு மீறலாலும் ஏற்படும் தவறுகளும் இதில் அடங்கும். எதிர்காலத்திற்கான நிதி அறிக்கையின் மேலான நிதி உள் நிதிக்கட்டுப்பாட்டின் திட்ட மதிப்பீடு, நிறுவனத்தின் நிலையின் மாற்றம் அல்லது கொள்கை கடைப்பிடித்தல் தன்மையின் வேறுபாடு அல்லது மோசமான செயல்முறைகளால் போதுமானதாக இல்லாமலும் மற்றும் ஆபத்துக்கும் உட்பட்டது.*

**கருத்து**

*எங்களுக்கு கிடைக்கப் பெற்ற தகவல்கள் மற்றும் விளக்கங்களின்படி, நிறுவனம் 31.3.2023 அன்றைய தேதியில் போதுமான நிதி உட்கட்டுபாடு அமைப்பினை கொண்டுள்ளது என்றும், அந்த அமைப்பு இந்திய பட்டயக்கணக்காளர் நிலையத்தினால், வெளியிடப்பட்டுள்ள நிதி உட்கட்டுப்பாட்டின் மேலான நிதி அறிக்கையின் தணிக்கைக்கான வழிபாட்டு குறிப்பில் கூறப்பட்டுள்ள முக்கியமான கூறுகளை அடிப்படைகளை நிறுவி, தன்னிச்சையான தணிக்கையாளரின் விலக்கப்பட்ட கருத்துக்கான அடிப்படை என்ற பத்தியில் குறிப்பிடப்பட்டுள்ள கட்டுப்பாட்டு குறைகள் தவிர, திறம்பட செயல்பட்டு வருகிறது என்பது எங்கள் கருத்தாகும்.*

**எஸ். உதயகுமார் & அசோசியேட்ஸ்**
*பட்டய கணக்காளர்களுக்காக*
*பதிவு எண் 006639*S

*இடம் : சென்னை*
*நாள் : 01.09.2023*

S. **உதயகுமார் பங்குதாரர்**, *பதிவு எண் 201004*
UDIN 23201004BGTHAY4500

## முதன்மை பொது கணக்காளர் (தணிக்கை - II)
## தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி

நிறுவனங்கள் சட்டம் 2013 பிரிவு 143(6)(b) ன் கீழ் மார்ச் 31, 2023 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டிற்கான, தமிழ்நாடு தொழில் வெடிமருந்து நிறுவனத்தின் தனியான நிதிநிலை அறிக்கைமீதான, இந்திய கட்டுப்பாட்டாளர் மற்றும் தணிக்கையாளரின் கருத்துக்கள்.

